www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16-31 டிசம்பர் '88
4-3
விலை ரூ.1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

## வினை விதைத்த காங்கிரசு வினை அறுக்கிறது!




படிப்பகம்

# வாசகர் கடிதம்

www.padippakam.com

ஆசிரியர்
'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை-600 015.

அன்புள்ள ஆசிரியருக்கு,

○ இதழ் எண் 24ன் அட்டைப்படம் எளிமையாகவும், சிறப்பாகவும் இருந்தது. அரசியலற்ற வாதத்தின் மூலம் இளைஞர்களை திசைதிருப்பி காங்கிரசுக்கு வலு சேர்த்து வரும் உதயமூர்த்தி போன்ற கைக்கூலிகளையும், கபட வேடதாரிகளையும் தொடர்ந்து அம்பலப்படுத்தக் கோருகிறோம்.

வாசகர் வட்டம் இராசிபுரம்

○ மாலத்தீவில் கூலிப்படையை விரட்ட ராணுவ நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் இந்துமாக்கடல் பிராந்தியத்தின் பேட்டை ரௌடியாக இந்திய ஆளும் பாசிச கும்பல் மாறி வருவதை தலையங்கத்தின் மூலம் விளக்கியது சிறப்பானது. ''ஆசியாவின் ஜோதி'' யாக ஆளும் வர்க்கத்தால் சித்தரிக்கப்படும் நேரு, ஆபாச - வக்கிர வாழ்க்கை வாழ்ந்த ஒரு போலி ஜனநாயகவாதி என்பதை ஆதாரத்துடன் விளக்கியது அருமையானது.

அறிவுமணி ஊற்றங்கரை

○ எட்வினாவின் காலடியில் கிடந்த, காதலிக்கு கவர்னர் பதவி கொடுத்த காமப் பித்தன் மாமா நேருவின் கருப்பு அரசியல் வாழ்க்கையை கலங்கரை எழுத்துக்களால் தோலுரித்துக் காட்டியது மிகச் சிறப்பானது. இந்துமாக்கடல் பிராந்திய ஜனநாயகப் பாதுகாவலனாக வேடமிட்டுத் திரியும் ஆளும் ராஜீவ் கும்பலின் ஆக்கிரமிப்புக் கொள்கையையும், மாலத் தீவின் சர்வாதிகார ஆட்சியையும் பட்டம்பிடித்துக் காட்டிய உங்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

ம.சுந்தர் மத்திய சிறை
நக்சல்பாரி அரசியல்கைதி கடலூர்

○ அப்பாடா, என் வயிறு குளிர்ந்தது! ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி நேரத்தில் தொழிற்சங்க புரோக்கர்கள், ''விடிந்தால் தீபாவளி! அடுப்பிலே எண்ணெய் சட்டி! இனி வேறு வழியில்லை; நிர்வாகம் கொடுப்பதை ஏற்றுக் கொள்வோம்'' என்று துரோக ஒப்பந்தங்களை தொழிலாளர்கள் மீது திணிப்பதை வழமையாகக் கொண்டிருந்த நிலையில், இம்முறை தொழிலாளர்கள் கலகம் செய்து அவர்களது துரோகத்தை அம்பலப்படுத்தியதை எடுப்பாக எடுத்துரைத்தது மிகச் சிறப்பானது.

இன்பரசன் கடலூர்.

○ ஒரு மாபெரும் புரட்சிக்கு மக்களைப் பயிற்றுவிக்கும் ஆரம்பப் பள்ளியில் தபால் மூலம் கற்பது போன்ற உணர்வை நமது இதழ் அளிக்கிறது. ஆளும் வர்க்கத்தின் அயோக்கியத்தனங்கள், போலி கம்யூனிஸ்டுகளின் துரோகங்கள் முதலானவற்றோடு, உதயமூர்த்தி, சோ போன்ற கழிசடைகளின் கயவாளித் தனங்களையும் தோலுரித்துக் காட்டும் போர் வாளாகத் திகழ்கிறது புதிய ஜனநாயகம்!

தமிழ்ச்செல்வன் மதுரை

○ கடந்த சில மாதங்களாக புதிய ஜனநாயகத்தைப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். போலீசு குண்டர்களின் அக்கிரமங்களை விளக்கியும், திராவிடக் கட்சிகளைப் போலத்தான் புரட்சி பேசும் போலிக் கம்யூனிஸ்டு ஆட்சியும் உள்ளது என்பதை விளக்கிக் காட்டியும், உதயமூர்த்தி போன்ற கைக்கூலிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றியும் பெரும் சேவை செய்துவரும் புதிய ஜனநாயகத்தின் புரட்சித் தீ திக்கெட்டும் பரவட்டும்.

மகாராசன் பழியஞ்சிய நல்லூர்

○ புரட்சியைக் கண்டஞ்சும் பேடிகளாக ரஷிய ஏகாதிபத்தியவாதிகள் என்ற கட்டுரை மூலம் திருத்தல் வாதிகளின் முகத்திரையை நன்கு கிழித்தெறிந்து காட்டியுள்ளீர்கள். பாசிச அல்லது ராணுவ சர்வாதிகார எதிர்ப்புப் போரில் மட்டுமின்றி ஒவ்வொரு சிறு விஷயத்திலும் கூட எதிர்ப்புரட்சி வேலை செய்யும் போலிக் கம்யூனிஸ்டுகளின் துரோகத் தனத்தை அம்பலப்படுத்துவது நமது கடமை என்பதை உணர்த்திய புதிய ஜனநாயகமே, உன் பணி தொடர உன்னை வளர்த்தெடுப்பதே எம் போன்ற இளைஞர்களின் முதற்கடமை.

ஆர்.ஏ.ஜி. கம்பம்

○ டிசம்பர் மாதம் பாசிச ராஜீவ் கும்பல், புரட்டல்வாத டெங் கும்பலுடன் பேச்சு வார்த்தை நடத்தப் போகிறேன் என்று சீனாவுக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் இச்சமயத்தில், இந்திய - சீன எல்லைத் தகராறு பற்றிய வரலாற்றுத் தொடரை துவங்கியிருப்பது மிகச் சரியானது. இப்புதிய தொடர் இந்திய ஆளும் வர்க்கத்தின் விஸ்தரிப்பு கொள்கைகளையும், நேருவின் துரோகத்தையும் அம்பலப்படுத்திக் காட்டும் என்று நம்புகிறேன்.

கோவிந்த ராஜ் மதுரை.

○ இதழ் எண் 23ன் அட்டைப்படம் சிறப்பாக இருந்த அதே சமயம் பலருக்கு குழப்பமாக இருந்தது. படங்களை 1,2,3 என வரிசைப்படுத்தியிருக்கலாம். அல்லது அம்புக் குறியிட்டுக் காட்டியிருக்கலாம்.

வாசகர் வட்டம் சென்னை

○ இதழ் எண் 24ல் வெளியான 'அரசு -நாட்டிலேயே மிகப் பெரிய ஏகபோக சுரண்டல் நிறுவனம்' என்ற கட்டுரையில் குறிப்பாக ரயில்வே, தபால் - தந்தித் துறை முதலானவற்றையும் இணைத்து எழுதியிருக்க வேண்டும். உள்நாட்டு காகிதத் தொழிலைக் காக்கவே வெளிநாட்டு காகிதத்தின் விலை உயர்த்தப்படுகிறது என்று சுதேசி வேடம் போடும் ஆளும் கும்பலின் பித்தலாட்டத்தை தர்க்க வாதத்தோடு முறியடித்திருக்க வேண்டும். அடுத்து, நூற்றாண்டு விழாக் காணும் துரோகி நேருவை முழுமையாக அம்பலப்படுத்தாமல் விட்டது முக்கிய குறையாகும். தர்மதேஜா, முந்திரா ஊழல் முதலானவற்றோடு முன்பு புதிய கலாச்சாரம் இதழில் வெளிவந்த, அமெரிக்க அதிபர் தம் இந்தியத் தூதருக்கு எழுதிய கடிதத்தில் பெண் பித்தரான நேருவை வயப்படுத்த பெண்ணைப் பயன்படுத்தச் சொன்னது முதலான முக்கிய விஷயங்களையும் இணைத்து எழுதியிருக்க வேண்டும்.

'மக்கள் கலாச்சாரப் படையே வெல்லும்' என்ற செய்திக் கட்டுரையில் அகில இந்திய புரட்சிப் பண்பாட்டு மையத்தில் அங்கம் வகிக்கும் அமைப்புகளின் பெயர்களை ஆங்கில முன்னெழுத்துச் சுருக்கத்தில் கொடுத்தது தவறு. அமைப்பின் முழுப்பெயர் - மாநிலம் இவற்றை தமிழிலேயே கொடுத்திருக்க வேண்டும். மேலும் RWA என்பதற்குப் பதில் RAW என்று அச்சாகி தவறான பொருள் தருவதாக உள்ளது.

வாசகர் வட்டம் தஞ்சை

(இதே விமர்சனத்தை வேறு சில தோழர்களும் குறிப்பிட்டுள்ளனர். எமது கவனக் குறைவால் நேர்ந்த இத்தவறுக்கு மிகவும் வருந்துகிறோம். - ஆ.குழு)

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

● *பல வாசகத் தோழர்கள் தொடர்ந்து கவிதைகளை அனுப்பி அவற்றை வெளியிடக் கோருகிறார்கள். நமது இதழில் அரசியல் செய்திகளுக்கே முக்கியத்துவம் அளிப்பதாலும், போதிய இடமின்மையாலும் கவிதைகளை வெளியிட இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

● *சில வாசக நிருபர்கள் கடைசி நேரத்தில் செய்திக் கட்டுரைகள், ரிப்போர்ட்டுகளை அனுப்பி அவற்றை உடனடியாக வெளியிடக் கோருகிறார்கள். கடைசி நேரத்தில் அனுப்பப்படும் கட்டுரைகளை அவ்விதழிலேயே வெளியிடுவது மிகச் சிரமமானது. கூடிய மட்டிலும் இதழ் வெளி வருவதற்கு 10 நாட்கள் முன்னதாகவே அவற்றை அனுப்பக் கோருகிறோம்.*

● *மணியார்டர் மூலம் சந்தா தொகை அனுப்பும் வாசகர்கள் மணியார்டர் ஃபாரத்தின் அடிப்பகுதியில் தமது முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடக் கோருகிறோம்.*

தோழமையுடன்,
ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

3

16-31 டிசம்பர்'88

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# அம்பலப்பட்ட பாசிச கும்பலுக்கு அடக்குமுறையே ஆயுதம்

ஒன்றன் பின் ஒன்றாக ஊழல் கொள்ளையில் வகையாக சிக்கிக் கொண்டு பீதியடைந்து நிற்கும் பாசிச ராஜீவ் கும்பல், மத்திய -மாநில அமைச்சர்கள் மீதான ஊழல் புகார்களை விசாரிக்க ஏற்பாடு செய்யும் 'லோக் பால்' மசோதாவைக் கைவிட முடிவு செய்துள்ளது.

ஊழலில் ஊறித் திளைக்கும் மத்திய - மாநில அமைச்சர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி தண்டிக்க வலுவான சட்டமும் வழி முறைகளும் இல்லாத நிலையில் ''லோக் பால்'', ''லோக் ஆயுக்த'' போன்ற உயர்மட்ட விசாரணை மன்றங்களை நிறுவி பொது மக்கள் கொண்டு வரும் ஊழல் புகார்களை உடனுக்குடன் விசாரித்து நீதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. கடந்த 20 ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் இதற்காக மும்முறை மசோதாக்கள் கொண்டு வரப் பட்டும் ஓட்டுப் பொறுக்கி அரசுகள் அவற்றை சட்டமாக நிறைவேற்றாமல் காலாவதியாக்கின. 1985லிருந்து பரிசீலனையில் இருந்து வந்த இப்போதைய 'லோக் பால்' மசோதாவையும், காலாவதியாக்கி விட்டது பாசிச ராஜீவ் கும்பல்.

ஊழல் ஒழிப்புச் சட்டத்தை கடந்த ஆண்டு தமது அரசு நிறைவேற்றியிருப்பதாலும், மக்கள் குறைகளைக் கேட்டறிய ஒரு தனி அமைச்சகம் அமைத்திருப்பதாலும் ''லோக் பால்'' போன்ற நீதி விசாரணை அமைப்புகள் அவசியமில்லை என்று தமது அரசு கருதுவதாக கருப்பு சட்ட மந்திரி சிதம்பரம் நியாய வாதங்களை அடுக்குகிறார். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக போபர்ஸ் கொள்ளை, நீர்மூழ்கிக் கப்பல் பேரம், ரிலையன்ஸ் மோசடிகள், அஜிதாப் பச்சன் விவகாரம் முதலானவற்றில் கையும் களவுமாக சிக்கிக் கொண்ட பாசிச ராஜீவ் கும்பல் இவற்றை ஒரு 'லோக் பால்' விசாரித்தால் முடிவு எப்படியிருக்குமோ என்றஞ்சியே இம்மசோதாவைக் கை கழுவியுள்ளது என்பது ஊரறிந்த உண்மை.

நீதியைப் புதை குழிக்கு அனுப்பி ஊழல் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்து விட முயலும் அதே சமயம், இவற்றை அம்பலப் படுத்தி வரும் பத்திரிக்கைகளின் குரல் வளையை நெறிக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த பாசிச கும்பல் இப்போது அதற்கும் தயாராகி விட்டது. ஏற்கனவே அவதூறு தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து பலத்த கண்டனத்திற்குப் பிறகு அதை விலக்கிக் கொண்டு பாசிச கும்பல் ஜனநாயக நாடகமாடிய போது, மீண்டும் பாய்வதற்காகவே இப்போது பாசிச கும்பல் பதுங்குகிறது என்று தெளிவாகக் குறிப்பிட்டோம்.

அதை மெய்ப்பிக்கும் வகையில், பத்திரிக்கை மற்றும் புத்தகப் பதிவு திருத்த மசோதா என்ற ஒரு புதிய கருப்பு மசோதாவை டிசம்பர் 5-ம் நாளன்று வழக்கம் போலவே முன்னறிவிப்பின்றி கொண்டு வந்துள்ளது ராஜீவ் கும்பல்.

இக்கருப்பு மசோதா சட்டமானால் ஒரு சாதாரண மாஜிஸ்டிரேட் பத்திரிக்கை அலுவலகத்தில் நுழைந்து பத்திரிக்கையின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்க முடியும். அவர் கோரும் விபரங்களை உரிய நாளில் தரத் தவறினால் ரூ.5,000 அபராதம் விதிக்கப் படும். தரப்படும் விபரங்களில் சிறு தவறு நேர்ந்தாலோ, திருப்திகரமாக இல்லை என்று மாஜிஸ்டிரேட் கருதினாலோ அதனடிப்படையில் பத்திரிக்கை பதிவாளர் நடவடிக்கை எடுத்து, பதிவுப் பெயரைப் பறிமுதல் செய்து பத்திரிக்கையை வெளியிட முடியாமல் தடுத்து விட முடியும். அவதூறு தடைச் சட்டத்தை விட கொடூரமான, ஆனால் மறைமுகமான தாக்குதலுக்கான ஏற்பாடுதான் இது.

இனி கருப்புச் சட்டங்களே தன்னைக் காக்க முடியும் என்ற இழிந்த இறுதி நிலைக்கு பாசிச கும்பல் ஓடி ஒளிந்துள்ள அதே சமயம், ஏழாண்டு காலம் லஞ்ச ஊழல் - அடக்குமுறைகள் மூலம் தென் கொரியாவை ஆட்டிப் படைத்த கொடிய ராணுவ சர்வாதிகாரி சுன், பதவியிலிருந்து விரட்டப்பட்ட இன்று, தான் கொள்ளையடித்த சொத்துக்களை அரசிடம் ஒப்படைப்பதாகவும், தனது குற்றங்களுக்கு மக்களிடம் மன்னிப்பு கேட்டும் மன்றாடுகிறார். பங்கு மார்க்கெட் ஊழலில் சிக்கிய ஜப்பானிய நிதி மந்திரி பதவி விலகுகிறார். வங்க தேச வெளியுறவு மந்திரி ரஷியாவிடமிருந்து கையூட்டு பெற்ற விவகாரம் அம்பலமானதும் பதவியைத் துறக்கிறார்.

ஆனால் இவர்களை விட ஒரு படி மேலே போய் ஊழல்-ஒடுக்கு முறையில் முன்னிற்கும் பாசிச கும்பல் முற்றாக அம்பலப்பட்ட பின்னரும் இன்னமும் ஆட்சியில் ஒட்டிக் கொண்டிருப்பதற்கான காரணம், நாடாளுமன்ற - சட்ட பூர்வ வழிமுறைகளின் மூலம் தன்னை அதிகாரத்திலிருந்து வீழ்த்த முடியாது என்ற தைரியம் தான். அதனாலேயே மேலும் மேலும் பாசிச கருப்புச் சட்டங்களைக் கொண்டு வந்து தன்னை ஆயுத பாணியாக்கிக் கொண்டு கொக்கரிக்கிறது. இனியும் நாடாளுமன்ற சட்ட பூர்வ வழி முறைகளின் மூலம் பாசிச கும்பலை தண்டிக்கவோ தூக்கியெறியவோ முடியும் என்று நம்புவது முட்டாள்தனமானது. நாடாளுமன்ற - சட்ட பூர்வ வழிகளுக்கு அப்பாற்பட்ட புரட்சிகர போராட்டங்களின் மூலமே அதை சாதிக்க முடியும்.

படிப்பகம்

# தேர்தல் சீர்திருத்தச் சட்டம்:

www.padippakam.com

# கிழிந்த முகமூடிக்கு இன்னுமொரு ஒட்டு

போடப்படும் சட்டங்கள் மீறப்படுவதற்கானதாக இருக்கும்போது, பெருகிவரும் தேர்தல் மோசடிகளைத் தடுக்கும் பொருட்டு, தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளதாக ஜனநாயக நாடகமாடுகிறது ஆளும் பாசிச கும்பல்.

வாக்களிக்கும் வயதை 21 விருந்து 18 ஆகக் குறைப்பது, தில்லு முல்லுகள் வன்முறைகள் நடக்கும் முக்கியமான 150 தொகுதிகளில் எலக்ட்ரானிக் வாக்குப் பதிவு கருவிகளை நிறுவுவது. அந்நியச் செலாவணி மோசடி செய்தவர், கடத்தல், பதுக்கல், கள்ள மார்க்கெட், கலப்பட பேர்வழிகள், மத - இன - மொழி வெறியைத் தூண்டுவோர், தீண்டாமையை ஆதரிப்போர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டோர் முதலானோரை தேர்தலில் போட்டியிடாமல் தடுப்பது, தேர்தல் பிரச்சாரத்தைத் தடுப்போர், வாக்குச்சாவடிகளை கைப்பற்றுவோர் — அவர்கள் அரசியல் கட்சித் தெண்டராகவோ அல்லது தேர்தல் அதிகாரியாகவோ இருந்தாலும் ஆறுமாதம் முதல் மூன்றாண்டு வரை சிறைத்தண்டனையும் அபராதமும் விதிப்பது முதலான விதிகளைக் கொண்ட தேர்தல் சீர்திருத்த மசோதாவை வரும் பாராளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில் சட்டமாக நிறைவேற்ற ஆளும் பாசிச ராஜீவ் கும்பல் தயாரிப்பின்போது ஆதரவு தெரிவித்து ஒப்புதலும் அளித்துள்ளன.

இந்தச் சீர்திருத்தங்கள் மட்டும் போதாது. இன்னும், கட்சிகள் வசூலிக்கும் தேர்தல் நிதியை தணிக்கை செய்தல், தேர்தல் கமிஷனராக ஒரு நபர் இருப்பதற்குப் பதில் ஒரு குழுவை நியமித்தல், தேர்தலில் பண ஆதிக்கத்தை முறியடிக்க அரசே வேட்பாளர்களுக்கு நிதியளிப்பது, தேர்தல் பிரச்சார காலத்தைச் சுருக்குவது முதலான இன்னும் பல சீர்திருத்தங்கள் கோரப்படுகின்றன.

ஆனால் நாடாளுமன்ற ஜனநாயகம் என்பதே மோசடியான ஒரு அரசியல் சூதாட்டம். அதில் தேர்தல் தில்லுமுல்லு —மோசடிகளை ஓட்டுப் பொறுக்கிகள் ஒரு தொழில் முறையாகவே வளர்த்துள்ளனர். தேர்தல் அராஜகம் —தில்லுமுல்லுகளைச் செய்வோரைத் தண்டிக்கவும் ஏற்கனவே சட்டங்களும் உள்ளன.

ஆனால் அவை என்றுமே நடைமுறைப் படுத்தப்பட்டதில்லை. இந்த லட்சணத்தில், தண்டனையை அதிகப்படுத்துவதன் மூலம் இந்த அராஜகத்தை தடுத்துவிட முடியும் என்று ஏய்க்கின்றனர் ஓட்டுப் பொறுக்கிகள்.

லஞ்சம் பெருவிட்டதால் பொதுவாழ்வில் இத்தீய போக்கை ஒழிக்கப் போவதாக லஞ்ச ஒழிப்பு - கண்காணிப்பு கமிட்டியை அரசு கொண்டு வந்தது. லஞ்சத்தை ஒழிக்க கடும் நடவடிக்கை எடுத்துள்ளதாக மக்களை ஏய்க்க முடிந்ததே தவிர, ஊழல் இன்னும் பல வழிகளில் புழுத்துப் பெருகவே செய்தது. கள்ளச்சாராயத்தை ஒழிக்க சிறப்பு போலீஸ் படையை நிறுவிய பிறகு கள்ளச்சாராயம் குடிசைத் தொழிலாகப் பெருகிப் பாய்கிறது. கட்சித் தாவல் தடைச் சட்டம் கொண்டு வந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தில் உள்ள முறைகேடுகளைத் தடுத்து விட்டதாகப் பீற்றிக் கொண்டது பாசிச கும்பல். உண்மை



*நவீன வாக்குப் பதிவுக் கருவி தேர்தல் மோசடியைத் தடுத்து விடுமா?*

யில் இச்சட்டம் காங்கிரசுக் காரர்களைக் கொத்தடிமைகளாக்கவும், எதிர்க்கட்சி அரசுகளைக் கவிழ்க்கவும் தான் பயன்படுகிறது. அதே கதிதான் பரபரப்பாக அரங்கேறவுள்ள தேர்தல் சீர்திருத்தச் சட்டத்துக்கும் ஏற்படும்.

பிற நாடுகளைப் போலவே வாக்களிக்கும் வயதை 18 ஆக குறைத்திருப்பதன் மூலம் ஜனநாயகத்தின் பரப்பை விரிவுபடுத்தியிருப்பதாகப் பாசிச கும்பல் பீற்றிக் கொள்கிறது. இதன்மூலம் புதிதாக 4.7 கோடி புதிய வாக்காளர்கள் தேர்தலில் பங்கேற்பர் என்று மதிப்பிடப்படுகிறது. தமக்கென்று ஒரு உலகப் பார்வை கொண்ட சித்தாந்தமோ, அதைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமையோ உருவாக்கிக் கொள்ள முடியாத பாமரத்தனமான இளைஞர்களை கவர்ச்சி வாதத்தில் மூழ்கடித்து தமது பொறுக்கி அரசியலுக்கான அடிப்படையை ஓட்டுக் கட்சிகள் விரிவுபடுத்திக் கொள்வதைத் தவிர வேறெந்த பலனும் இதனால் ஏற்படப்போவதில்லை.

எலக்ட்ரானிக் கருவிகளைக் கொண்டு வாக்குப்பதிவு செய்வதன் மூலம் மோசடிகளை தடுத்து விடவும் முடியாது.

ஏனெனில் வாக்குப்பதிவைக் கண்காணிக்கும் தேர்தல் அதிகாரிகள், போலீசு - ராணுவத்தை எந்தக் கட்சியும் விலைபேசி விடமுடியும் என்கிறபோது, ஏற்கனவே பல வாக்குச் சாவடிகளில் ஆளுங்கட்சியின் விசுவாச அதிகாரிகளே வாக்காளர்களை உள்ளே நுழையவிடாமல் தாங்களே மொத்தமாக வாக்களித்து விடும் போது, எலக்டரானிக் கருவி என்ன, எந்தக் கருவி வந்தாலும் இந்த மோசடியைத் தடுத்து விட முடியாது.

ஜனநாயக வேடம் போடும் ஓட்டுக் கட்சிகள் தேர்தல் மோசடிகளுக்கெதிராக மசோதாவைத் தயாரித்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் தமிழகத்தில் கையில் பணப் பெட்டியுடன் தேர்தல் டிக்கெட் கேட்டு அரசியல் சூதாடிகள் ஒவ்வொரு ஓட்டுக் கட்சி அலுவலகத்திலும் மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள். இருவேளை சாப்பாட்டுடன் இனாம் 15 ரூபாய் என்று வெளிப்படையாகவே கூலிக்கு ஆட்களைப் பிடித்து வந்து சென்னையில் ராஜீவ் பங்கேற்ற பேரணியை நடத்தியது காங்கிரசு கும்பல். சாதிய சங்கங்களுடன் ஓட்டுக்கும் சீட்டுக்குமான



படிப்பகம்

பேரங்கள் மும்முரமாக நடக்கின்றன. ஆக கொண்டு வரப்படும் தேர்தல் சீர்திருத்தச் சட்டம் இதர சட்டங்களைப் போல காகிதச் சட்டமாக இருக்குமேயன்றி, ஓட்டு வேட்டை நாயகளின் வாலை ஒருக்காலும் நிமிர்த்தி விடாது.

மற்றபடி, இத்தேர்தல் சீர்திருத்தச் சட்டம் வழக்கம்போலவே எதிர்க்கட்சிகளைப் பழி வாங்க ஆளும் பாசிச கும்பலால் ஏவப்படும். அதோடு, தேர்தலைப் புறக்கணிக்க கோரும் புரட்சிகர அமைப்புகள், இப்புதிய சட்டத்தின் கீழ் தேர்தல் பிரச்சாரத்தைத் தடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு அவற்றின் செயல்பாடுகள் முடக்கப்படும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, பெருகி வரும் தேர்தல் மோசடி, வன்முறை, அராஜகத்தைக் கண்டு வெறுப்புற்று, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீதே மக்கள் நம்பிக்கை இழந்து வருவதால் மாற்றுப்பாதையை நோக்கி அவர்கள் திரும்புவதால் —நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையையும் மாயையையும் ஏற்படுத்தி ஏய்ப்பதற்காகவே இத் தேர்தல் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன.

இத்தேர்தல் சீர்திருத்த சட்டத்தின் மூலம் 'ஜனநாயக பூர்வமான'. 'சுதந்திரமான' தேர்தலுக்கு உத்திரவாதம் கிடைத்துள்ளதாக ஆளும் பாசிச கும்பல் பிரமையூட்டுகிறது. ஆனால் இச்சட்டங்களை செயல்படுத்தும் அதிகாரம் அரசு எந்திரத்திடம் தான் இருக்கிறது. தேர்தல் விதிகளைத் தெரிந்தே வேண்டுமென்றே மீறும் அரசு நிர்வாக எந்திரத்தின் தயவில்தான் தேர்தல் கமிஷன் இயங்குகிறது. எனவ ஒருபோதும் 'சுதந்திரமான', 'ஜனநாயகமான' தேர்தல் நடக்காது. அதே போல என்னதான் சீர்திருத்தங்கள் கொண்டு வந்தாலும் 'நியாயமான', 'சுதந்திரமான', 'ஜனநாயக' தேர்தலை நடத்தவோ வெற்றி பெறவோ காங்கிரசு கும்பலால் ஒருக்காலும் முடியாது. அரசு நிதியையும் அரசு எந்திரத்தையும் தமது தேர்தல் ஆதாயத்துக்காக ஆளும் கும்பல் பயன்படுத்துவதை எதிர்க்கட்சிகளால் தடுக்கவும் முடியாது.

● மணி

### தோழர் வரவரராவை விடுலை செய்! கையெழுத்தியக்கம்

தோழர் வரவரராவை விடுதலை செய்யக் கோருகின்ற கையெழுத்தியக்கம் இந்தியாவெங்கும் மேற்கொள்ளப்படுகிறது. அகில இந்திய புரட்சி பண்பாட்டு மையத்தின் உறுப்பினரான மக்கள் கலை இலக்கியக்கழகம் தமிழக மக்களிடையே இவ்வியக்கத்தை மேற்கொள்கிறது. புதிய ஜனநாயக வாசகர்கள் இவ்வறிக்கையில் கையெழுத்திடுவதுடன் மேலும் நூற்றுக்கணக்கில் கையெழுத்துக்களை சேகரிப்பதன் மூலம் என்.டி.ஆர். அரசின் பாசிச அடக்குமுறையைத் தமிழக மக்களிடையே அம்பலத்திற்குக் கொண்டுவரக் கோருகிறோம்!

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**தமிழ்நாடு**



சிந்தனைக்கு விலங்கிட முடியாது! சிறைவாசம் புரட்சியாளனை முடக்க முடியாது! சிறைக்குக் கொண்டு செல்லப்படுகிறார் வரவரராவ்.

# சுதந்திரம் உயிரை விட உன்னதமானது!

**வரவரராவ்** 1969 இல் சிர்காகுளம் பகுதியில் வெடித்துப் பரவிய விவசாயப் போராட்ட நெருப்பில் தோன்றிய ஓர் தீப்பொறி. கடந்த 20 ஆண்டுகாலமாக அந்தத் தீப்பொறி அணைய மறுக்கிறது. கனன்று கொண்டேயிருக்கிறது. ஆம்! நக்சல்பாரி, சிரிகா குளம் விவசாயிகள் போராட்டங்களிலிருந்து உத்வேகம் பெற்ற வரவரராவ் எத்தனை அடக்குமுறைகள் வந்தபோதும் அடிபணிந்தாரில்லை.

புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரான வரவரராவ் 1973 இல், 1974 இல் மீண்டும் 1975 இல் பல்வேறு பொய் வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டார். 1985 முதல் ஆந்திரத்துப் புரட்சியாளர்கள் மீது என்.டி.ஆர். அரசு கட்டவிழ்த்து விட்டிருக்கும் அடக்குமுறை வரவரராவையும் விட்டு வைக்கவில்லை. அவரைக் கொலை செய்யப்போவதாக பகிரங்கமாக அறிவித்தனா போலீஸ் வெறிநாய்கள்.

சிறைதான் ஜனநாயகத்தின் அடையாளம் எனும்போது விரும்பிச் சிறை புகுவதும் அதிசயமில்லைதானே! வெளியே இருந்தால் போலீசால் கொலை செய்யப்படுவோமென்பதால் தானே முன்வந்து ஜாமீனை ரத்து செய்து சிறை புகுந்தார் கவிஞர் வரவரராவ்.

அவரது குடும்பம் துன்புறுத்தப்படுகிறது. சிறையில் மற்ற கைதிகளுக்குரிய உரிமை கூட அவருக்கு மறுக்கப்படுகிறது.

வரவரராவ் துணைவியார் ஆசிரியராக இருக்கும் புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தின் 'சிரிஜனா' எனும் இலக்கியப் பத்திரிக்கை தடை செய்யப்பட்டுள்ளது. 1986 இல் வெளியிடப்பட்ட 'எதிர்காலத்தின் சித்திரம்' என்ற அவரது கவிதைத் தொகுப்பும் தடை செய்யப்பட்டுள்ளது. அவர் மீதான வழக்குகள் மூன்றில் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஏவிவிடப்பட்டுள்ளது. அவர் சிறையில் இருக்கும்போதே அவர் மீது புதிதாக இரண்டு பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. எப்படியேனும் அவரை நிரந்தரமாகச் சிறை வைத்துவிட முயல்கிறது என்.டி.ஆர். அரசு.

"உயிரை விட சுதந்திரம் எல்லையற்ற மதிப்புள்ளது என்பதை எனது மூன்றாண்டு சிறைவாழ்க்கை எனக்குக் கற்பித்திருக்கிறது. எனவே மீண்டும் என்னை ஜாமீனில் விடுவியுங்கள்" என்று வாரங்கல் நீதிமன்றத்தில் பேசியிருக்கிறார் வரவரராவ். இதற்கென்ன பொருள்?

பேச்சுரிமையும் எழுத்துரிமையும் மனிதனின் பிரிக்கவியலாத உரிமைகள், செயல்படுபவனே மனிதன். செயல்பாடு முடங்கிய பின் வாழ்ந்தென்ன பயன்? செயல்பாடு தான் வாழ்க்கை. செயல்பாடுதான் சுதந்திரம். அந்தச் சுதந்திரத்தைப் பெறுவதற்கு உயிரை விலை கேட்கிறது அரசு. உயிர் வாழும் உரிமைக்கு உயிரே விலை. "அந்த விலையைக் கொடுக்கிறேன் என்னை விடுதலை செய்", என்கிறார் வரவரராவ்.

சிறைக்கம்பிகளின் தயவில் சுதந்தரம்! போலீசின் துப்பாக்கி முனையில் ஊசலாடும் இந்தியக் குடிமகனின் உயிர்வாழும் உரிமை! இந்திய 'ஜனநாயகத்தின்' கோரமுகம் அம்பலமாகிறது! வரவரராவை விடுதலை செய் என்னும் முழக்கம் இந்தியா வெங்கும் எதிரொலிக்கிறது!



படிப்பகம்

www.padippakam.com




பார்வையற்ற பட்டதாரிகளின் உண்ணாவிரதப் போராட்டம்.

கடந்த 25. 10. 88 முதல் சென்னை கடற்கரை சாலையில் உள்ள எழிலகத்திற்கு முன்பு தமிழ்நாடு பார்வையற்றோர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் சார்பாக 17 பேர் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். ஏழு சங்கங்களின் சார்பாக போராடிய இவர்கள் மானியம் கேட்டோ, பொருளாதார உதவி கேட்டோ கையேந்தவில்லை. எல்லோருமே படித்த பட்டதாரிகள், தொழில்படிப்பு முடித்தவர்கள். கவுரவமாக வாழ்வதற்கு படிப்புக்கு தகுந்த வேலை கோரித்தான் இவர்கள் போராடுகின்றனர்.

பார்வையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் ஒரு சதவிகித உரிமையிருந்தும் அந்த அற்ப சலுகையைக்கூட இவர்களுக்கு முறையாக வழங்கவில்லை, அரசு. இதனால் பட்டம் பெற்ற பார்வையற்றவர்கள், சாலையோரங்களில், ரயில் நிலையங்களில், லாட்டரிச் சீட்டு விற்கும் இழிநிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பார்வையற்ற பட்டதாரி ஒருவர் சொன்னார், ''ஒரு சதவிகிதம் வேலை கொடுக்கும் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றினால் பத்தாயிரத்துக்கும் அதிகமானோருக்கு வேலை கொடுக்க வேண்டியிருக்கும். ஆனால் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருப்போர் எண்ணிக்கையே வெறும் 2,800 பேர்தான்'' என்றார். என்ன கொடுமை இது?

காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்திற்கு அரசிடம் அனுமதி கோரிய போது, பார்வையற்றவர்களை அனுமதிக்கு இழுத்தடித்ததோடு அல்லாமல், கடைசி நேரத்தில் 4 நாட்களுக்கு மட்டுமே போராட்டத்திற்கு அனுமதி அளித்தது, அரசு. முக்கிய அரசு அலுவலகங்கள் முன்பு ஒவ்வொரு நாளும் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி மறுத்து, உண்ணாவிரதம் இருக்க மட்டுமே அனுமதியளித்தது. பார்வையற்ற போராட்டக்காரர்கள், அண்ணா சாலையில் ஊர்வலம் நடத்த அனுமதி மறுத்த இக் கேடுகெட்ட அரசு, அதே நாளில் சினிமா கழிசடைகளின் கார் ஊர்வலத்திற்கு தாராள அனுமதியளித்தது.

வீரஞ்செறிந்த பார்வையற்ற போராட்டக்காரர்கள், சட்டத்தை மீறி அரசு அலுவலகங்களின் முன்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். வேலைதர வக்கற்ற வெட்கங்கெட்ட அரசு, போலீசு நாய்களை ஏவி பார்வையற்றவர்களை கண்மூடித்தனமாக தாக்கியது. போராட்டக்காரர்களின் முட்டியை உடைத்து, சிறைபிடித்து கமிசனர் அலுவலகத்தினுள் அடைத்து வைத்தது.

இவர்களின் கோரிக்கையைப் பற்றி பேசவந்த சமூக நலத்துறை அதிகாரி, எல். வைத்தியலிங்கம் ''உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள். ஏதோ நாலு பத்திரிக்கைக்காரன்கள் உங்கள் செய்தியை போடுவார்கள். அரசியல் கட்சிகளே திணறும் போது மக்கள் செல்வாக்கு அற்ற நீங்கள் என்ன செய்ய முடியும்?'' என்று அதிகார திமிரோடு பேட்டை ரௌடி மாதிரி மிரட்டினார்.

ஏற்கனவே '84 ஆம் ஆண்டில், இதே கோரிக்கைகளுக்காக போராடி சாகும் தருவாயிலிருந்த பார்வையற்ற போராட்டக்காரர்களை மருத்துவமனையில் சேர்த்தது எம்.ஜி.ஆர் தலைமையிலான 'சேடிஸ்ட்' அரசு. போராட்டக்காரர்களை நிர்ப்பந்தப்படுத்தி ஊசிமூலம் சத்துநீர் செலுத்தி உயிர் பிழைக்க வைத்து, தர்மவானாக வேடம் போட்டது. அதேபாணியில், இன்று போராட்டத்தை அணுகுகிறது, கவர்னர் அலெக்சாண்டர் தலைமையிலான காங்கிரசு அரசு.

போராட்ட பிரதிநிதிகளை முதலில் சந்திக்க உறுதி கொடுத்த அலெக்சாண்டர், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் போதே, சில நிமிடங்களில் வேறு வேலை இருப்பதாக காரணம் காட்டி, பாதியில் எழுந்து கொண்டு போராட்டக்காரர்களை அவமதித்து வெளியில் அனுப்பினார். கண்துடைப்புக்காக நடவடிக்கை எடுப்பதாக உறுதிகூறி, இப்பிரச்சினை சம்பந்தப்பட்ட அரசுக் கோப்பை அதிகாரிகளுக்கு அனுப்பினார். அதிலும் நயவஞ்சகமாக, ''கண்டிப்பாக நிறைவேற்றவும்'' என்பதற்கு பதில் ''நிறைவேற்ற முயற்சிக்கவும்'' என்று குறிப்பெழுதி கையொப்பமிட்டிருக்கிறார்.

ஆனால், ''எவ்வளவு அடக்குமுறைகள் வந்தாலும் நாங்கள் அஞ்சப் போவதில்லை, போராட்டத்தை தொடர்வோம்'' என்று வீரமுழக்கமிடுகின்றனர், பார்வையற்ற பட்டதாரிகள். உழைக்கும் மக்களே! இதோ நமது சகோதரர்கள் தன்னந்தனியாக போராடுகிறார்கள். எதிரியால் அவமானப்படுத்தப்படுகிறார்கள், அடக்குமுறைக்கு ஆளாகிறார்கள். விரைந்து வாருங்கள்! பார்வையற்ற நம் சகோதரர்களை நம் கண்ணின் கருமணியாகக் காப்போம்! போராட்டத்திற்கு தோள் கொடுப்போம்!

**சோலை.**

## இது நியாயமா?

ஒப்பந்த அடிப்படையில் உதவிப் பேராசிரியர்கள் நியமனத்திற்காக சுமார் 20 பார்வையற்ற முதுகலை எம்.பில். பட்டதாரிகள் கல்லூரிக் கல்வி இயக்குநரால் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர். நேர்முகத் தேர்வு நவம்பர் 4 அன்று நடைபெற்றது.

நேர்முகத் தேர்வு முடிவுகள் பற்றி அறிய பார்வையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் இயக்குநரைச் சந்தித்த பொழுது தமிழ்த் துறையில் மட்டுமே காலியிடங்கள் இருப்பதாகவும் இதரத் துறைகளில் காலியில்லை என்றும் கூறப்பட்டது. இது உண்மையானால், ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய இவ்விதரத் துறைகளுக்கு தமிழ்நாடு முழுவதிலிருந்து எதற்காகப் பார்வையற்றவர்களை நேர்முகத் தேர்வுக்கு அழைத்தனர்!

''காலியில்லை'' என்பதற்கான விளக்கமும் விநோதமாக இருக்கிறது. இந்தத் துறைகளில் 1 விழுக்காட்டிற்கு மேலாகவே பார்வையற்றவர்கள் உதவி ஆசிரியர்களாக பணி புரிகிறார்களாம். பார்வையற்ற ஆசிரியர்களால் மேற்கூறிய ஐந்து துறைகளில் மட்டுமே பணிபுரிய முடியும் என்கிற நிலையும், அறிவியல் பொருளியல், கணக்கியல் போன்ற பலபல துறைகளில் பார்வையற்றவர்க்கு வாய்ப்பு இல்லை என்கிற நிலையும் எல்லோருக்கும் தெரிந்ததே. எனவேதான் எல்லாத் துறைகளிலும் உள்ள பதவிகளில் 1 விழுக்காடு கணக்கெடுத்து, அந்த எண்ணிக்கைப் பதவிகளை பார்வையற்றவர்களால் செய்ய முடியும் என்று கண்டறியப்பட்ட இந்த ஐந்து துறைகளில் நிரப்ப வேண்டும் என்பது தானே நியாயம்.

உண்மை நிலைமை இவ்வளவு மனச்சோர்வு தருவதாக இருக்கும்பொழுது, அரசுச்சார்பில் நான்கு பேர்கள் உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப் பட்டுள்ளனரென்றும் தமிழ்நாட்டின் முதல் பார்வையற்ற பி.எச்.டி பட்டதாரிக்கும் நியமன உத்தரவு பிறப்பிக்கப் பட்டதாகவும் பிரச்சார அறிவிப்புகள் வெளியாகின்றன. இன்றுவரை யாருக்கும் நியமன உத்தரவு வரவில்லை.

**ச.சீ.கண்ணன்**



படிப்பகம்

www.padippakam.com

# பெனாசிரின் வெற்றி ஜனநாயகத்தின் வெற்றியா?



இராணுவ சர்வாதிகாரி ஜியாவின் 11 ஆண்டு கால கொடுங்கோலாட்சிக்குப் பிறகு பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெனாசிர் பூட்டோ வெற்றி பெற்று பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

"கிழக்கின் திருமகள்" "உலகிலேயே மிக இளம் வயது பிரதமர்", "ஆணாதிக்க முஸ்லிம் நாட்டின் முதல் பெண் பிரதமர்" என்றெல்லாம் பத்திரிக்கைகள் பாராட்டுகின்றன. 'இராணுவ சர்வாதிகாரம் வீழ்ந்தது; நாடாளுமன்ற ஜனநாயகம் மலரத் தொடங்கியுள்ளது' என்று முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் ஏற்றிப் போற்றுகிறார்கள்.

ஆனால் பாகிஸ்தானில் இராணுவ சர்வாதிகாரம் தூக்கியெறியப்பட்டு ஜனநாயகம் முளைவிடத் தொடங்கியுள்ளதா என்றால் நிச்சயமாக இல்லை. பத்திரிக்கைகள் குறிப்பிடுவது போல் ஜியா சகாப்தம் முடியவும் இல்லை; ஜனநாயகம் மலரவும் இல்லை. பெனாசிர் வெற்றி பெற்றிருக்கிறார். ஆனால் அவரை திரை மறைவிலிருந்து ஆட்டுவிக்கும் ராணுவக் கும்பலே உண்மையில் வெற்றி பெற்றுள்ளது.

ஜியாவின் சாவுக்குப் பிறகு பாகிஸ்தானில் தேர்தலை நடத்த ஆளும் ராணுவக் கும்பல் ஒருபோதும் இசையவில்லை. ஆனால் பாகிஸ்தானின் தலைவிதியைத் தீர்மானிக்கும் அமெரிக்கா, இந்தப் போக்கானது மக்களை புரட்சிப் பாதைக்கு வேகமாகத் தள்ளி விடும் என்றஞ்சியது. எனவே தன்னிடம் ராணுவ -பொருளாதார உதவிக்காக கையேந்தி நிற்கும் மூன்றாவது முக்கிய நாடான பாகிஸ்தானில் தேர்தலை நடத்தும்படி ஆளும் ராணுவக் கும்பலை நிர்பந்தித்தது.

மறுபுறம், தேர்தல் நடைபெற வேண்டுமானால் ஆளும் ராணுவக் கும்பலுடன் ஒத்துழைக்காமல் எதையும் செய்ய இயலாது என்ற நிலையில் தமது கட்சியின் தரகர்களை அனுப்பி ராணுவக் கும்பலுடன் பேரம் நடத்தினர் பெனாசிர். அடுத்த ஜனாதிபதியையும், வெளியுறவு அமைச்சரையும் தாங்களே தீர்மானிப்போம் என்ற ராணுவ கும்பலின் முடிவை வாய் திறக்காமல் ஏற்றுக் கொண்டார். இன்னும் ஒருபடி மேலே போய் துருக்கி நாட்டுப் பாணியில் நாட்டின் நிலையான தீர்மானகரமான அமைப்பான உச்சமட்ட ராணுவக் கவுன்சிலை தாம் ஆட்சிக்கு வந்தால் நிறுவுவதாக விசுவாசமாக வாலை ஆட்டினார். பெனாசிரும் இதர ஓட்டுக் கட்சிகளும் பாகிஸ்தானின் வெளியுறவுக் கொள்கை, அணு ஆயுதக்கொள்கை, பொருளாதார நெருக்கடி, பூதாகரமான ராணுவச் செலவு முதலானவற்றைப் பற்றி ஓட்டுப் பொறுக்கும் போது வாயே திறக்கக் கூடாது; வெற்றி பெற்று ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சியும் மனித உரிமைகளை நசுக்கி அட்டூழியம் புரிந்த, ஊழலில் ஈடுபட்ட எந்த ஒரு ராணுவ அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்ற கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொண்ட பிறகுதான் பாகிஸ்தானில் தேர்தல் நடத்த ஆளும் ராணுவ கும்பல் முன் வந்தது.

இவையெல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு, நாட்டில் மொத்த வருவாயில் பெரும் பகுதியை விழுங்கி ஏப்பம் விடும் ராணுவக் கும்பலைப் பற்றியோ, நாட்டை திவால் நிலைக்கு தள்ளிவிட்டுள்ள 20,000 கோடி ரூபாய்க்கும் மேலான அந்நியக் கடனைப் பற்றியோ, ஆப்கன் பிரச்சினையைப் பற்றியோ எதுவுமே வாய் திறக்காமல் தான் பெனாசிர் ஓட்டு வேட்டையாடினார். இதெல்லாம் இருக்கட்டும். நாட்டை அச்சுறுத்தி வரும் மிகப் பெரும் அபாயமான போதை மருந்து - ஆயுதக் கடத்தல் மாஃபியா குண்டர்களைப் பற்றிகூட பெனாசிர் வாய் திறக்கவில்லை. சுருக்கமாகச் சொன்னால் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, நாட்டையும் மக்களையும் ஆளும் ராணுவக் கும்பலுக்கும் அமெரிக்க எஜமானர்களுக்கு அடகு வைத்து விட்டார் என்பதே உண்மை.

இத்தனைக்கும் பிறகும் பெனாசிர் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது என்றால் அது ஜியாவின் ராணுவ ஆட்சியின் மீதான மக்களின் வெறுப்பு, தூக்கிலிடப்பட்ட பூட்டோவின் மகள் என்ற அனுதாப அலை ஆகியவையே காரணம். ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே பெனாசிர் மக்களின் முதுகில் குத்தி விட்டு ராணுவ கும்பலுக்கு விசுவாசமாக நடக்கத் தொடங்கி விட்டார். நேற்று வரை ராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்து முறியடிப்பேன் என்று வீர வசனம் பேசிய பெனாசிர் இன்று, "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ராணுவத்தைப் பழி வாங்குவோம், ராணுவச் செலவுகளையும் சலுகைகளையும் நிறுத்தி விடுவோம் என்று எதிர்க் கட்சியினர் அவதூறு செய்கின்றனர். ஆனால் அது உண்மையல்ல. நாட்டின் பாதுகாப்புக்கு ராணுவம் மிக அவசியம் என்பதை நானறிவேன்!" என்று தட்டைத் திருப்பிக் கொண்டு தாளம் போடுகிறார். அதோடு, ஜியா சாவுக்குப் பிறகு இடைக்கால அரசின் அதிபராக இருந்த இஷாக்கானையே மீண்டும் அதிபர் தேர்தலில் ஆதரித்தும், ஜியா ஆட்சியில் வெளியுறவு அமைச்சராக இருந்த யாகூப் கானையே மீண்டும் தமது அரசின் வெளியுறவு அமைச்சராக நியமித்தும் ராணுவ கும்பலின் காலடியில் விழுந்து கிடக்கிறார்.

தூக்கிலிடப்பட்ட பெனாசிரின் தந்தை பூட்டோ, 1970 தேர்தலின் போது தம்முடன் தேசிய வாதிகளையும், இடதுசாரி ஜனநாயக சக்திகளையும் சேர்த்துக் கொண்டு ஓட்டுப் பொறுக்கினர். ஆனால் பெனாசிர் இன்று மருந்துக்குக் கூட முற்போக்கு வாடையை நுகரத் தயாராக இல்லை. இடதுசாரி சக்திகளிடமிருந்து முற்றாக கழட்டிக் கொண்டு அப்பட்டமாக முஸ்லிம் அடிப்படைவாதிகள், பெரு நிலப் பிரபுக்கள் பெரும் வர்த்தக சூதாடிகளிடம் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மொத்தத்தில் 93 இடங்களைக் கைப்பற்றி முன்னணியில் இருந்தாலும் பெனாசிர் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை. 90 நாள் அவகாசத்தில் பெரும்பான்மையைக் காட்ட வேண்டும் என்ற நிபந்தனையோடு அவர் அரியணை ஏறியுள்ளார். எனவே நாடாளுமன்ற ஜனநாயக கலாச்சாரப்படி உதிரிகளையும் சிறிய கட்சிகளையும் தம்மை ஆதரிக்கக் கோரி பண மூட்டையுடன் அலைகிறார் பெனாசிர்.

பாகிஸ்தானுக்கு ஒரு பெனாசிர் என்றால் அவருக்கு முன்னோடியாக பிலிப்பைன்சில் அகினோ இருக்கிறார். மார்க்கோசின் ராணுவ சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்டக் கிளம்பிய அகினோ கடைசியில் அதிகாரத்தை ராணுவ கும்பலுடன் பங்கிட்டுக் கொண்டதற்கு மேல் வேறொன்றும் செய்ய முடியவில்லை. அதே போலத்தான், ஜியாவின் ராணுவ சர்வாதிகாரத்தை விட வஞ்சகத்தனமான பெனாசிரின் ஜனநாயக ஆட்சியால் பாகிஸ்தானின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளை ஒருக்காலும் தீர்க்க முடியாது. ராணுவ கும்பலுக்கு விட்டுக் கொடுத்து சாந்தப் படுத்துவதன் மூலம் நெருக்கடிகள் மேலும் முற்றவே செய்யும். இனி பாக். மக்களின் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் நல்வாழ்வுக்குமான ஆட்சி அமைவதாக இருந்தால் அது புரட்சியில் மலரும் புதிய ஜனநாயக அரசாக மட்டுமே இருக்க முடியும். பெனாசிரின் போலி ஜனநாயகத்தையும், ராணுவ சர்வாதிகார அபாயத்தையும் புதை குழிக்கு அனுப்பி விட்டு பாக். மக்கள் விரைவில் அதைச் சாதிப்பார்கள்.

■ குமார்



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய அரசியலை ஆட்டிப்படைக்கும் மாஃபியா கும்பல்கள்!

பம்பாய் புறநகர்ப்பகுதியொன்றில் நெடுஞ்சாலை ஓரமாக ஒரு பிணம் கிடந்தது. விசாரணைக்குப் பின் இறந்துபோன அந்த நபர் பம்பாய் உளவுத்துறை போலீஸ் கான்ஸ்டபிள் என்.எஸ்.மொகிதே என்பது கண்டுபிடிக்கப்பட்டது. பிணத்தின் அருகே ரிவால்வர் ஒன்றும் கிடந்தது.

சவப்பரிசோதனை அறிக்கை வருவதற்கு முன்பாகவே அவசரம் அவசரமாக ஊகங்களை வெளியிட்டது பம்பாய் போலீஸ் துறை. ''மொகிதே ஒரு குடிகாரன், பெண் பித்தன்; போதையில் தற்கொலை செய்து கொண்டுவிட்டான்'', என்று செய்தி பரப்பப்பட்டது. பிணத்திற்கு 5 அடி தள்ளித்தான் கைத்துப்பாக்கி கிடந்திருக்கிறது என்பதால் இது தற்கொலையல்ல என்று பத்திரிக்கைகள் மறுத்தன. மொகிதேயைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கினார்கள் சில பத்திரிக்கையாளர்கள்.

15 ஆண்டுகளாக உளவுத்துறை கான்ஸ்டபிளாக இருந்து வந்த மொகிதே, தொடர்ந்து மகாராஷ்டிர காங்கிரஸ் அமைச்சர்கள் சிலருக்கு பாதுகாப்பு கொடுக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார். நாட்கள் செல்லச் செல்ல மாபியாக்கும்பல்களுக்கும் அமைச்சர்களுக்கும் இடையே உள்ள நெருக்கமான தொடர்பு மொகிதேக்குத் தெரிய வரத் தொடங்கியது. மேலும் விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கினார். இதுதான் கொலைக்குக் காரணம் என்று எழுதியுள்ளன பத்திரிக்கைகள். மொகிதே யாருக்காக விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கினார்? விவரங்களை யாருக்குத் தெரிவித்தார்? யாரால் கொல்லப்பட்டார்?

● ○ ●

ஆகஸ்டு 8ம் தேதி. பம்பாயின் சாவேரி பஜார் பகுதி. இதுதான் இந்தியாவின் தங்கச் சந்தை. ஒவ்வொரு கடையிலும் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுவதே இந்தச் சந்தையில்தான். அங்கேயிருக்கும் மிகப்பெரிய நகைக்கடைகளுள் ஒன்றான கல்யாண் ஜுவல்லர்ஸ் கடைக்குள் கையில் துப்பாக்கியுடன் நான்கு இளைஞர்கள் நுழைகின்றனர். கடை முதலாளியையும், வாடிக்கையாளர்களையும் குளியலறையில் தள்ளிப் பூட்டுகின்றனர். ஒரு குந்து மணியளவு கூட மிச்சம் வைக்காமல் கடையைச் சூறையாடுகின்றனர். நிதானமாக வெளியே சென்று வாடகைக்கார் ஒன்றைப் பிடித்துக் கொண்டு தப்பிச் செல்கின்றனர். இன்றுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

கொலை செய்யப் பட்ட கான்ஸ்டபிள் மொகிதே



பம்பாய், இந்தியாவின் வர்த்தகத் தலைநகரம் என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான். பம்பாயின் பகட்டுக்கும் மினுமினுப்புக்கும் உள்ளே ரகசியமாக இன்னொரு உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த ரகசிய உலகத்தில் உயிருக்கு மதிப்பில்லை. பணம் மழையாகப் பொழியும். எங்கிருந்து வருகிறது, எப்படி சம்பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றியெல்லாம் கேள்வியே கிடையாது. இந்த ரகசிய உலகத்தில் கூலிகள் திடீரென கோடீசுவரர்கள் ஆவார்கள்; பேட்டை வஸ்தாதுகள் அரசியல் பிரமுகர்களாவார்கள்.

ஹாஜி மஸ்தான், கரீம்லாலா, யூசுப் படேல், வரதராஜ முதலியார், தாவூத் இப்ராகீம் என்று ஒரு பட்டியலே இருக்கிறது. இவர்களது 'வீரத்தை' 'நேர்மை'யை மெச்சி திரைப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இவர்களே திரை உலகத்திற்குப் பணம் கொடுக்கும் லேவாதேவிக்காரர்களாகவும் இருக்கிறார்கள். இந்தச் செய்திகளில் பல நீங்கள் கேள்விப்பட்டதுதான். ஆனால் நீங்கள் கேள்விப்படாத ஒரு புதிய அபாயகரமான போக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. இவர்கள் அரசியலிலும் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

உள்ளூர் பேட்டை ரவுடிகள் அரசியலுக்கு வருவதும், உள்ளூர் கள்ளச்சாராயப் பேர்வழிகள் எம்.எல்.ஏ. ஆவதும் நமக்குத் தெரிந்ததுதான். ஆனால் இவர்கள் அப்படியல்ல; இந்தக் கும்பல்கள் மாஃபியா என்று அழைக்கப்படுகின்றன.

மாஃபியா — இது இத்தாலியச் சொல். சர்வதேச இரகசிய உலகக் கிரிமினல் கும்பல் என்பது இதன் பொருள். இங்கே இது வளர்ந்து வந்ததற்கு ஒரு வரலாறே இருக்கிறது.

1920 களில் பம்பாய் படிப்படியாக ஒரு வர்த்தக நகரமாக எழும்பிக்கொண்டிருந்தது. பிரிட்டிஷ் இந்தியாவின் வடமேற்கு எல்லைப் புறமாகாணங்களிலிருந்தும், ஆப்கானிஸ்தானிலிருந்தும், வறுமையின் கொடுமையினால் பத்தான் இனத்தைச் சேர்ந்தவர்கள் இடம் பெயர்ந்து கொண்டிருந்தார்கள். உத்திரபிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களைச் சேர்ந்த ஏழை முஸ்லீம்களும் பிழைப்புக்காகப் பெருமளவில் இடம் பெயரத் தொடங்கினார்கள். புதிதாக, வெகு வேகமாக எழும்பிக் கொண்டிருந்த பம்பாய் அவர்களைக் கவர்ந்தது. வேலை கிடைத்தவர்கள் போக மீதமுள்ளவர்கள் சிறு திருட்டுகளில் ஈடுபடத் தொடங்கினார்கள். பம்பாயின் சில பகுதிகளில் கத்திகளும், துப்பாக்கிகளும் சரளமாகப் புழங்கத் தொடங்கின. கஞ்சாவும் கூடத்தான்.

1947க்குப்பின் இவர்களுக்கு கடத்தல் தொழில் வேலை வாய்ப்பளித்தது. மேலை நாடுகளிலிருந்து தங்கத்தைக் கொண்டுவருவதும் இங்கிருந்து வெள்ளியைக் கொண்டு போவதும் பிரதானத் தொழிலாக இருந்தது. அப்துல் வகாப்·கலாதாரி போன்ற பெரும் கடத்தல் புள்ளிகள் இந்த சாம்ராஜ்ஜியத்தை நிர்வகித்தனர். ஆரம்ப நாட்களில் இந்தக் கும்பல்களில் கூலியாக வேலை செய்தவர்கள் தான் ஹாஜி மஸ்தான் போன்றவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இப்படித் தொடங்கிய பம்பாய் ரகசிய உலகம் 1970 களில் பம்பாயை ஆட்டிப்ப டைக்குமளவு ஒரு சக்தியாக வளர்ந்தது. அவசரநிலை அறிவிக்கப்படுவதற்கு முன் தனது ஆட்சிக்கெதிராக அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்திருந்த மக்களை இந்திரா திசைதிருப்ப வேண்டியதாயிற்று. ஹாஜி மஸ்தான், யூசுப்படேல், வரதராஜ முதலியார், மகேஷ் டோலாகியா ஆகியோர் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

சிறையிலிருந்து வெளியே வந்தவுடன் மஸ்தான், படேல் போன்றவர்கள் 'மனந்திருந்திய மைந்தர்கள்' போல நடித்தனர். கடத்தல் தொழில் செய்து பிழைப்பதை விட சட்டபூர்வ தொழிலிலேயே அதிக லாபம் இருப்பதைக் கண்டு கொண்டனர். அரசியல்வாதிகள், மாநகராட்சி அதிகாரிகள், போலீஸ் துணையுடன் இடிந்த கட்டிடங்கள், காலி மனைகள் ஆகியவற்றை ஆக்கிரமித்து அங்கே பல மாடிக் கட்டிடங்களை எழுப்பினர். இன்றைக்கு மஸ்தான் ஒரு அரசியல் தலைவர். 'முஸ்லீம் மக்களின் சமுதாயத் தலைவர்' என்று தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்ட மஸ்தான். பிவாண்டி மதக்கலவரத்தில் முஸ்லீம் தரப்பில் இருந்து கொண்டு மதவெறித்தீயை விசிறிவிட்ட மஸ்தான், கடத்தல்காரன் மஸ்தான் —இன்று அரசியல் கட்சித் தலைவர்; 'தாழ்த்தப்பட்டவர்கள் — முஸ்லீம் சிறுபான்மையினர் நலப்பேரவை' என்ற பெயரில் ஒரு அமைப்பை வைத்துக் கொண்டு தன் கையிலிருக்கும் சில ஆயிரம் ஓட்டுக்களை விலைபேசிக் கொண்டிருக்கும் தரகன்.

முதலில் சமூக விரோதியாக அரசால் சித்தரிக்கப்பட்ட மஸ்தான் சமூகத்தலைவராக உருமாற்றம் பெறுவதற்கு சிறிது காலம் பிடித்தது. ஆனால் வர்தாபாய் என்றழைக்கப்பட்ட வரதராஜ முதலியார் கதை அப்படியல்ல; கடத்தல், விபச்சாரம், கள்ளச்சாராய விற்பனை, போதை மருந்து வியாபாரம் ஆகிய எல்லாவற்றிலும் ஈடுபட்டுக் கொண்டே சமூக அந்தஸ்தும் பெற முடிந்தது. 1965 —இலேயே பம்பாயில் 150 டாக்சிகள் வர்தாபாய்க்காக கள்ளச்சாராயம் கடத்தின. நூற்றுக்கணக்கான பெண்கள் கடத்திவரப்பட்டு வர்தாவின் கையிலிருந்த அலிகள் பட்டாளத்தால் துன்புறுத்தப்பட்டு விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். மறுத்த பெண்களின் கால்கள் முறிக்கப்பட்டன; 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தபோது தொழிலாளிகளை அடித்து நொறுக்க வர்தாவின் ஆட்கள்தான் பயன்படுத்தப்பட்டனர். தமிழர் நலனுக்காக வென்றிருந்த ஆம்புலன்ஸ் வண்டிகள்தான் தங்கம் கடத்தப் பயன்படுத்தப்பட்டன. வர்தாவுக்கு எதிராக உண்மையை எழுத முனைந்த பத்திரிகையாளர்கள் விலைபேசப்பட்டனர். இணங்காதவர்கள் மிரட்டப்பட்டனர்.

இப்படிப்பட்ட அருவருக்கத்தக்க கேவலமான சமூக விரோதிதான் பம்பாய் தமிழர்களின் தலைவன் என்று சித்தரிக்கப்பட்டான். 1983 -இல் இலங்கைத் தமிழர்களின் மீதான தாக்குதலை எதிர்த்து பம்பாயில் தி.மு.க.வினர் ஊர்வலம் நடத்த ஆட்களை அனுப்பியது வர்தாபாய்தான். ஆண்டுக்கொரு முறை நடத்தப்படும் பிள்ளையார் சதுர்த்தி விழாவில் அமிதாப்பச்சன் முதல் மகாராஷ்டிர நிதி அமைச்சர் வரை அனைவரும் பங்கேற்றனர். போலீஸ் உயரதிகாரிகளின் குடும்பத்திருமணங்களை எல்லாம் வர்தாபாய் முன்நின்று நடத்தினான்.

1984-இல் பவார் என்ற போலீஸ் அதிகாரி வர்தாவைக் கைது செய்யமுயன்ற போது கட்சி வேறுபாடின்றி தமிழகத்திலிருந்து தி.மு.க., அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் ஆகியோர் வர்தாவை மீட்பதற்கு விரைந்தனர். இந்த ஆண்டு சென்னையில் வர்தா இறந்தவுடன் அவனது உடலை 2.6 லட்சம் ரூபாய் செலவு செய்து தனி விமானத்தில் பம்பாய் கொண்டு சென்றான் ஹாஜி மஸ்தான்.

வர்தாவின் சாவுடன் மாஃபியாக் கும்பல்களின் ஆதிக்கம் ஒழிந்ததா என்றால் இல்லை. வெட்ட வெட்ட விஷப்பாம்புகளைப் போல புதிது புதிதாகக் கிளம்பிக் கொண்டே இருக்கின்றன. அவை அப்படி வளர்வதற்கான அடிப்படை சமுதாயத்தில் இருக்கிறது.

சரிபாதிப் பொருளாதாரம் கருப்புப் பணத்தின் ஆதிக்கத்தில் இருக்கிறது. பன்னாட்டு நிறுவனங்கள், தொழிலதிபர்கள், சினிமா நட்சத்திரங்கள், தயாரிப்பாளர்கள், பெரும் வியாபாரிகள் ஆகியோரின் கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் பாதிக்கு மேல் சட்டப்பூர்வமாக அறிவிக்கப்பட இயலாத கருப்புப் பணம் சம்பந்தப்பட்டவை. ஏமாற்றுவதையே தங்களது தொழில் அடிப்படைத் தத்துவமாக வைத்திருக்கும் இவர்கள் ஒருவருக்கொருவர் மோசடி செய்து கொள்ளவும் தயங்குவதில்லை. சட்டப்பூர்வமான ஒப்பந்தமாக இருந்தால் தானே வழக்கு தொடர முடியும்? இதற்கு என்ன செய்வது?

மாஃபியா குண்டர்கள் பாக்கிகளை வசூலித்துத் தருகிறார்கள். அப்படியாராவது கொடுக்க மறுத்தாலோ அல்லது போலீசில் புகார் செய்ய நினைத்தாலோ அவர்களுக்குத் 'தக்கபடி' பாடம் புகட்டுகிறார்கள். பணம் அல்லது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஏற்படும் சண்டைகளை கட்டணம் வாங்கிக் கொண்டு தீர்த்து வைக்கிறார்கள். அந்நியச் செலவாணி தேவையா, ஏற்பாடு செய்து தருகிறார்கள். கல்லூரியில் இடம் வேண்டுமா அதையும் செய்ய ஆள் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் ஒரு விலை உண்டு.

ஊழல் போலீஸ், ஆமை வேகத்தில் நகரும் நீதி மன்றம் ஆகியவற்றால் வெறுப்புற்ற இந்திய கருப்புப் பண முதலைகள் சட்டப்பூர்வமாக எடுக்கக் கூடிய நடவடிக்கைகளுக்குக் கூட போலீசிடமோ கோர்ட்டுக்கோ செல்வதில்லை. மாறாக மாஃபியா குண்டர்களையே நாடுகிறார்கள்.

இவையனைத்தையும் விட மிக கொடியதொரு தொழிலையும் இந்த மாஃபியா குண்டர்கள் நீண்ட நெடுங்காலமாகச் செய்து வருகிறார்கள். கடத்தல்காரர்கள் முதல் அரசியல்வாதிகள் வரை தத்தம் துறையில் உள்ள எதிரிகளைத் தீர்த்துக்கட்ட நினைப்பவர்களுக்கு வாடகைக்குக் கொலைகாரர்களை அனுப்புகிறார்கள்.

40 ஆண்டுகளுக்கு முன்னால் ஆப்கானிஸ்தானிலிருந்து பிழைப்பதற்காக பம்பாய் வந்து நிரந்தரமாக இங்கேயே தங்கிவிட்ட கரிம்லாலா என்பவனின் தொழிலே இதுதான். ஒவ்வொரு கொலையின் மதிப்புக்கு ஏற்ப ஆயிரங்களிலும் லட்சங்களிலும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இவையன்றி, கடத்தல்காரர்கள் முதல் வியாபாரிகள் வரை சரக்குகள் கொண்டு போகும் போதும், பெட்டி பெட்டியாகக் கருப்புப்பணம் கொண்டு போகும் போதும் பாதுகாப்புக்கு ஆள் அனுப்பும் வேலையையும் இந்தக் கும்பல்கள் செய்கின்றன.

மாஃபியா கும்பல்களிடையே தோன்றும் தகராறுகளில் பட்டப்பகலில் நடுவீதியில்,



ஹாஜி மஸ்தான் — நேற்றைய கடத்தல்காரன், இன்றோ அரசியல் தலைவன்

படிப்பகம்

www.padippakam.com

# சென்னை — சாராய உடையாரின் சாம்ராச்சியம்!



எம்.ஜி.ஆர். உயிருடன் இருந்த போதே ராமசாமி உடையார் அடித்த கொள்ளைகள் பற்றிய செய்திகள் வரத் தொடங்கிவிட்டன. சாராய சாம்ராச்சியம் முழுவதையும் தன் கட்டை விரலின் கீழ் வைத்திருந்த உடையார் தான் நடத்தி வந்த பீர் தயாரிப்பு தொழிற்சாலையில் நட்டக்கணக்கு காண்பித்து 150 கோடி ரூபாய் விழுங்கி விட்டார் என்று புதிய குற்றச்சாட்டு கிளம்பியுள்ளது. இந்த 150 கோடியில் 75 கோடி எம்.ஜி.ஆருக்குக் கொடுக்கப்பட்டது போக மீதித் தொகையில் கணக்கு வரவேண்டிய பங்கு வரவில்லை என்பதால் இந்த ரகசிய பேரத்தைப் பற்றிய செய்தியை இதில் கூட்டுக்களவாணித் தனம் செய்த கபாளிபதி ராவ் என்பவர் அவிழ்த்து விட்டிருக்கிறார்.

இதுமட்டுமல்ல; அரசுக்கு சொந்தமான நிலம் அடிமாட்டு விலைக்கு (4 கோடி ரூபாய் நட்டத்தில்) விற்கப்பட்டு அந்த இடத்தில்தான் உடையாரின் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி கட்டப்பட்டிருக்கிறது. சென்னை சாலிக்கிராமம் பகுதியில் உடையாரைத் தவிர யாரும் நிலம் வாங்க முடியாது. வேறு யாருக்கும் விற்கவும் முடியாது என்ற அளவுக்கு உடையார் கும்பலின் காட்டு தர்பார் நடக்கிறது.

உடையாரின் அடியாள்படை தன்னைக் கொன்றுவிடக்கூடும் என்று பயந்து இதற்காகவே ஒரு குண்டு துளைக்காத கார் ஒன்றை வாங்கியுள்ளார் கபாளிபதிராவ்.

உடையார், பங்காரு அடிகள் என்று ஒரு கும்பல் எம்.ஜி.ஆரின் காலத்தில் உருவாகிப் பெருத்து விட்டது. கோடிக்கணக்கில் கொள்ளையடித்தும், சமூக விரோத நடவடிக்கைகள் மூலமும் சேர்த்த பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் கொண்டு போய்க் குவிக்கும் இந்த மாஃபியா கும்பல் தமிழகத்தில் வரவிருக்கும் எந்த ஆட்சியையும் விலை பேசும் என்பதில் ஐயமில்லை.

போலீஸ் நிலையத்தில் நீதி மன்றங்களில்' —என எல்லா இடங்களிலும் பகிரங்கமாகப் பல கொலைகள் நடந்துள்ளன. மிகக் கொடிய கொலைகாரர்களும் மாஃபியாக் குண்டர்களும் இப்படித்தான் கொல்லப்பட்டிருக்கிறார்களே தவிர போலீசினால் அல்ல; மாறாக போலீஸ் இவர்களிடம் சம்பளம் வாங்கும் கூலிக்காரனாகவும், உளவு சொல்லும் ஏஜெண்டாகவும் மட்டுமே செயல்படுகிறது.

பம்பாய் மாஃபியா கும்பல்கள் தற்போது இந்துக்கள், முஸ்லீம்கள் என்று இரு பிரிவாகக் பிரிந்து கொண்டு வருகின்றன. பம்பாய் மாநகராட்சியைக் கைப்பற்றியிருக்கும் சிவசேனா மகாராஷ்டிரம் முழுவதும் தன் ஆதிக்கத்தை விரிவு படுத்துவதற்காக இந்து மதத்தைச் சேர்ந்த மாஃபியா குண்டர்களை ஓரணியில் திரட்டி வருகிறது. பம்பாய், தானா நகர்களின் பல பகுதிகளில் கள்ளச்சாராய வியாபாரிகளிடம் சிவசேனா வசூலிக்கும் மாமூல் தொகையே ஆண்டுக்கு பல கோடி ரூபாய்கள் எனப் பெருகிவிட்டது. போலீசால் பல கொலைக்குற்றங்களுக்காகத் தேடப்படும் ஒரு மாஃபியா கொலைகாரனை சிவசேனா தலைவர்களும் தொண்டர்களும் பாதுகாப்புடன் போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவனுக்கு ஜாமீனுக்கும் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இன்னொரு புறம் முஸ்லிம் மாஃபியா கும்பலை காங்கிரஸ் வளைத்துப் போட்டிருக்கிறது. தற்போது பம்பாய் மாஃபியா உலகின் முடிசூடா மன்னனாக இருக்கும் தாவூத் இப்ராகிமை 1985 -இலேயே காங்கிரஸ் தன் பக்கம் இழுத்துக் கொண்டது.

தாவூத் இப்ராகிமின் கடத்தல் தங்கம் பம்பாய் தங்க மார்க்கெட்டுக்கு வந்து சேர்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்துதான் இந்தியாவில் ஒவ்வொரு நாளும் தங்கத்தின் விலை தீர்மானிக்கப்படுகிறது. இது பகிரங்க ரகசியம். மேலும் பல்வேறு கொலைக்குற்றங்களுக்காக தற்போது துபாயில் தலைமறைவாக இருந்து கொண்டு தனது தொழிலை நடத்தி வரும் தாவூத் இப்ராகீமைப் பிடிக்க இதுவரை அரசு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. மாறாக, மத்திய அரசின் 'ரா' எனும் உளவு நிறுவனம் பாகிஸ்தானை உளவறிவதற்குத் தாவூதைப் பயன்படுத்துகிறது. தண்டனைகள் ஏதுமின்றி 'பொது மன்னிப்பு' என்ற அடிப்படையில் பம்பாய் திரும்பி வருவதற்கு முயல்கிறான் தாவூத். ஹாஜி மஸ்தானின் இடத்தில் தாவூதைக் கொண்டு வந்து வைக்க முயல்கிறது காங்கிரஸ் கட்சி.

துபாயில் இருந்து கொண்டு பத்திரிக்கைகளுக்கு பேட்டி கொடுக்கிறான் தாவூத். ஷார்ஜாவில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் பார்வையாளர்கள் வரிசையில் தாவூத் உட்கார்ந்திருப்பதை தொலைக்காட்சியில் பார்த்து விட்டு தாவூதைக் கைது செய்ய வேண்டும் என்று சில பத்திரிக்கைகள் எழுதின ஆனால் இதுவரை அதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. கரீம்லாலா மற்றும் பிற முஸ்லீம் மாஃபியாக் குண்டர்களுடன் சமரசம் செய்து கொண்டு பம்பாய் திரும்ப விருக்கிறான் தாவூத். மகாராஷ்டிரக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முரளி தியோரா தாவூதைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்துகிறார்.

பம்பாய் உளவுத் துறை போலீஸ் கான்ஸ்டபிள் மொகிதே கொல்லப்பட்டதன் காரணம் இங்கேதான் இருக்கிறது. காங்கிரசு மந்திரிகளுக்கும் தாவூத் கும்பலுக்கும் இருக்கும் கள்ளத் தொடர்பை கண்ணெதிரில் கண்ட மாகிதே இதுகுறித்த விபரங்களை சிவசேனை ஆட்களுக்குத் தெரிவித்தார். அதன் விளைவுதான் மரணம். சென்ற வாரம் தாவூதின் பிரதான அடியாட்களின் ஒருவனான ராஜியை பட்டப்பகலில் கடைவீதியில் சுட்டுக் கொன்றதன் மூலம் இந்து மாஃபியா குண்டர்கள் இதற்குப் பழிதீர்த்துக் கொண்டார்கள்.

பம்பாய் மட்டுமல்ல நாட்டின் மற்ற பெரு நகரங்களான கல்கத்தா, சென்னை, டெல்லி போன்ற அனைத்து இடங்களிலும் மாஃபியாக் கும்பல்கள் ஆட்சி செலுத்தத் தொடங்கி விட்டன. எந்தத் தொழிலிலும் இல்லாத அளவுக்குப் பல கோடி ரூபாய்கள் லாபமாகவே கிடைக்கின்ற போதை மருந்துக் கடத்தும் தொழில் மாஃபியா கும்பல்களை மிகவேகமாக வளரச் செய்திருக்கிறது.

அமிர்ஜாதா, சமத், தாவூத் இப்ராகீம், ஆமலாசேப் — மாஃபியா கொலைகாரர்கள். இவர்களில் மற்ற மூன்று பேரையும் தாவூத்தின் அடியாட்கள் கொன்று விட்டனர்.





படிப்பகம்

கஞ்சா பயிரிடுவதிலும் அதைக் கடத்துவதிலும் கேரளா முன் நிற்கிறது. காங்கிரஸ் மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள், தொழிலதிபர்கள், போலீஸ் அதிகாரிகள் ஆகியோருக்கு சொந்தமான பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் கஞ்சா பயிரிடப்படுகிறது. தேயிலை, காப்பி, ரப்பர் எஸ்டேட்டுகளைப் போல கஞ்சா எஸ்டேட்டுகள் தோன்றியிருக்கின்றன.

தமிழகத்திலும், கேரளத்திலும் கஞ்சா வைத் தேடிக் கண்டுபிடித்து அழிப்பதாக போதை மருந்துத் தடுப்புப் பிரிவும் காவல் துறையும் சொல்வதெல்லாம் வெறும் நாடகமே என்று முதலாளித்துவப் பத்திரிக்கைகளே அம்பலப்படுத்துகின்றன. விபச்சார விடுதிக்காரனும், சாராயம் காய்ச்சுபவனும் மாதத்திற்கு இரண்டு கேஸ்கள் போலீசுக்காரனுக்குக் கொடுப்பது போல அழிப்பதற்காகவே வளர்க்கப்படும் கஞ்சாச் செடிகள் இவை. மொத்தம் பயிரிடப்படும் கஞ்சாவில் ஒரு சதவீதம் கூட இல்லை. போலீசோ, போதை மருந்துத் தடுப்பு அதிகாரிகளோ கஞ்சாவை அழிக்க முடியாது. காரணம் அதிகாரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் ஊற்றிக் கொடுக்கப்படும் சீமைச்சாராயம் தான் அதற்கு நீர்ப்பாசனம்; கொடுக்கப்படும் லஞ்சம்தான் கஞ்சாச் செடிக்குப் போடப்படும் உரம். கேரளாவின் கஞ்சா எஸ்டேட் முதலாளிகளிடம் காசு வாங்குபவர்கள் ஆளும் கட்சியினர் மட்டுமல்ல; எதிர்க்கட்சியினரும்தான். ஒரு முறை ஒரு பகுதியில் கஞ்சாச் செடிகளை அழிக்கக் கூடாது என்று அதிகாரிகளை எதிர்த்து பகிரங்கமாக ஒரு காங்கிரஸ் எம்.எல்.ஏ. போராட்டம் நடத்தியிருக்கிறார் என்றால் இந்த மா.்.பியாக் கும்பல் அரசியலில் செலுத்தும் செல்வாக்கு எத்தகையது என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

போதை மருந்துத் தடுப்புத் துறையைச் சேர்ந்த சில அதிகாரிகள் மிகவும் சிரமப்பட்டுப் பிடிக்கப்பட்ட இந்தியாவின் மிகப்பெரிய போதை மருந்துக் கடத்தல்காரன் (ஒரு ஆண்டு லாபம் 800 கோடி ரூபாய்) குர்பக்ஸ் சாம் பிர்யானி திகார் சிறையில் அடைக்கப் பட்டான். ஆனால் மருத்துவச் சிகிச்சைக்காக வெளியே அழைத்துச் சென்ற போது இரண்டுநாட்களுக்கு ஆளைக்காணவில்லை. பின்னர் அவனை நீதிமன்றத்துக்குக் கொண்டு போனபோது போலீசிலிருந்து அவனைக் கண்காணிக்க போதிய காவலர்கள் அனுப்பப்படவில்லை. சிறை அதிகாரிகள், போலீஸ் நீதிமன்றம் என்று திரும்பிய இடமெல்லாம் அவனுடைய கையாட்கள்.

தற்போது அவனுக்கெதிரான வழக்கைத் தோல்வியடையச் செய்வதற்காக சில சட்டங்களையே திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் காங்கிரஸ் தலைவர்களையும் விலை பேசிக் கொண்டிருக்கிறான் பிர்யானி.

ஒரு கிலோ எடையுள்ள ஹெராயின் என்னும் போதை மருந்தின் விலை இந்தியாவில் 1 லட்சம் ரூபாய். அதுவே அமெரிக்க சந்தையில் விலை 50 லட்சம் ரூபாய். இத்தனை லாபமுள்ள தொழிலில் ஈடுபட்டு, மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் கூட கனவிலும் நினைக்க இயலாத அளவு லாபத்தை அள்ளிக் குவிக்கும் மா.்.பியா கும்பல்கள் அதை வைத்துக் கொண்டு சும்மாயிருக்காது. லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்றில் முழு அளவுக்கு அதி நவீன ஆயுதங்கள் தரித்த தனியார் ராணுவங்களையே வைத்திருக்கின்றன மா.்.பியா கும்பல்கள்.



குர்பக்ஸ் சாம் பிர்யானி — சர்வதேச போதை மருந்துக் கடத்தல் மன்னன்.

போபார்ஸ் பீரங்கி பேர ஊழலில் பனாமா நாட்டைச் சேர்ந்த ஸ்வென்ஸ்கா என்ற நிறுவனத்தின் பெயரில் பல கோடி ரூபாய்கள் கமிஷன் தொகை ஸ்விஸ் வங்கியில் செலுத்தப்பட்டிருக்கிறதல்லவா? அந்த நிறுவனத்தின் முதலாளி ஸ்டீவன் சாமோஸ். ஒரு பிரபல மா.்.பியா கும்பலின் தலைவன். போதை மருந்துகள், ஆயுதம் கடத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பதுடன் அமெரிக்க சி.ஐ.ஏ. நிறுவனத்தின் ஏஜெண்டாகவும் செயல்படுபவன். அப்படியானால் பாசிச ராஜீவ் கும்பல் இத்தகைய மா.்.பியாக்களுடன் கொண்டிருக்கும் தொடர்பு என்ன என்ற கேள்வி எழுகிறது.

இந்திய அரசியலில் சர்வதேச மா.்.பியா கும்பல்கள் தலையிடத் தொடங்கி விட்டன. எல்லா மாநிலங்களிலும் எல்லா நகரங்களிலும் ஆக்டோபஸ் போலத் தனது கரங்களை நீட்டி வருகிறது இக்கும்பல். பம்பாயில் ஒரு தாவூத் இப்ராகிம் என்றால் சென்னையில் ஒரு உடையார். இவர்கள் யார் என்பதல்ல பிரச்சினை. இந்தக் கும்பல்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் உள்ள உறவு நாட்டின் அரசியலில் ஏற்படுத்தப் போகும் மாற்றங்கள்தான் பயங்கரமானவை.



வரதராஜ முதலியார் — பக்தி வேடம்

1986இல் கோகெய்ன் எனும் போதை மருந்தைக் கடத்தும் கும்பல் கொலம்பியா அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பியது. "எங்கள் தொழிலை சட்டபூர்வமானதாக அங்கீகரியுங்கள். அடுத்த நிமிடம் நமது நாட்டின் அந்நியக் கடன் முழுவதையும் நாங்களே அடைத்து விடுகிறோம்", என்று ஆசை காட்டினர். இந்த நிலைமையிலிருந்து இந்தியா வெகு தொலைவில் இல்லை.

1985 இல் ஐரோப்பிய நாடுகளில் விற்பனை செய்யப்பட்ட போதை மருந்துகளில் 60% இந்தியாவிலிருந்து கொண்டு போகப் பட்டவை என்று அந்நாடுகளின் புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன. அப்படியானால் இந்திய மா.்.பியா கும்பல்களின் கையில் எத்தனை ஆயிரம் கோடி ரூபாய்கள் புரண்டு கொண்டிருக்க வேண்டும்? இந்தப் பணம் அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஆற்றப் போகும் பாத்திரம் என்ன?

போராடும் தொழிலாளர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள், ஜனநாயக வாதிகள், புரட்சியாளர்கள் இவர்களை ஒடுக்க இப்போது காக்கிச்சட்டை குண்டர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். இனி முகம் தெரியாத கொலைகாரர்கள் தோன்றுவார்கள்; ஆளும் கும்பலின் அரசியல் எதிரிகளைத் தீர்த்துக் கட்டுவார்கள்; மக்கள் இயக்கங்களை ஒடுக்குவார்கள். இந்த அரசை அவர்கள் தங்கள் கைப்பிடியில் வைத்திருப்பார்கள். அந்த நிலையை நோக்கி மா.்.பியாக்களின் தயவை எதிர்நோக்கி இந்திய ஆளும் வர்க்கம் மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

—அஜீத்



படிப்பகம்

www.padippakam.com

# போலிகளின் ஆட்சியில் பத்திரிக்கைச் சுதந்திரம் படும்பாடு!



சிஐடியு குண்டர்களால் அடித்துக் கொல்லப்பட்ட 'உத்தர் பங்க சம்பத்' நாளேட்டின் அச்சக ஊழியர் திபாகர் மண்டல்.

ஆட்சியாளர்களின் லஞ்ச ஊழலை அம்பலப்படுத்தும் பத்திரிக்கைகளுக்கு ஓட்டுக்கட்சி அரசுகளிடமிருந்து எப்போதுமே சிறப்பு கவனிப்பு உண்டு. லஞ்ச ஊழலையும் ரௌடித்தனத்தையுமே தமது ஆட்சியின் அஸ்திவாரமாகக் கொண்டுள்ள வங்கத்தை ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகள் மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன?

மே. வங்கத்தில் சிலிகுரி வட்டாரத்திலுள்ள இமாலய் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் நடந்த லட்சக்கணக்கான ஊழல் கொள்ளையையும் அதில் போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர்களுக்குப் பங்கு இருப்பதையும் ஆதாரபூர்வமாக தொடர்ந்து அம்பலப்படுத்தியது 'உத்தர் பங்கா சம்பத்' என்ற வங்க நாளிதழ்.

போலிகள் இதைச் சகித்துக் கொள்வார்களா? இப்பத்திரிக்கையின் விநியோக, விற்பனை வேலையைச் செய்து வரும் - தெருக்களில் பத்திரிக்கையைக் கூலி விற்கும் -தொழிலாளர்களைத் தூண்டி விட்டனர். போலிக் கம்யூனிஸ்டுகள் வழி நடத்தும் சி.ஐ.டி.யு தொழிற்சங்கம்தான் இத்தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்குகிறது. பிறகு கேட்க வேண்டுமா?

இதர பத்திரிக்கைகளை விட கூடுதல் விற்பனைக் கழிவும், சலுகைகளும் அனுபவித்து வரும் இத்தொழிலாளர்கள் இன்னும் கூடுதல் விற்பனைக் கழிவு, சலுகைகளைக் கோரி அனாவசியமான போராட்டத்தில் இறங்கினர். பத்திரிக்கை வெளிவராமல் தடுத்தும், விற்பனையை முடக்கியும், அச்சக ஊழியர்கள், செய்தியாளர்களைத் தாக்கியும் அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். தொழிற்சங்கத்துடன் பேச்சு வார்த்தை முறிந்த நிலையில் அரசைத் தலையிடக் கோரி நிர்வாகம் பலமுறை வலியுறுத்தியும் ஆளும் போலிகள் அதைக் கண்டுகொள்ளவில்லை.

இந்நிலையில் நவம்.24 அன்று இப்பத்திரிக்கையின் செய்தியாளர்களும், அச்சக ஊழியர்களும் தாமே விற்பனை -விநியோக வேலையில் இறங்கினர். அச்சிட்ட நாளிதழை விநியோகிக்க வேன்களில் அவர்கள் ஏற்றியபோது ஆத்திரமுற்ற சி.ஐ.டி.யு. குண்டர்கள் சுற்றிவளைத்து மிருகத்தனமாகத் தாக்கினர். இக் கொலைவெறியாட்டத்தில் படுகாயமுற்ற

# பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்ட அரசுத்துறை தொழிலாளர்கள்

அரசுத்துறை என்பது அரக்கத்தனமான சுரண்டல் நிறுவனம். போலிக் கம்யூனிஸ்டுகள் பிதற்றுவது போல அது சோசலிசத்துக்கான பாதையோ தொழிலாளி வர்க்கத்துக்கு அனுகூலமானதோ அல்ல. இதர தனியார் துறைகளைப் போலவே அரசுத் துறையும் கொடூரமாகத் தொழிலாளர் உழைப்பை உறிஞ்சிக் கொண்டு வீதியிலே வீசி்யறிந்து வருகிறது.

இந்த மறுக்க முடியாத உண்மையை மீண்டும்நிரூபிக்கும் வகையில் அண்மையில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் (என்.எல்.சி) 23 தொழிலாளிகளை வேலையிலிருந்து விரட்டியடித்ததன் விளைவாக, அத்தொழிலாளர் குடும்பங்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளதை— பாதிக்கப்பட்ட தொழிலாளிகளின் சார்பாக முன்னின்று போராடிவரும் தோழர் ஆர். வெங்கடாசலம் வேதனையுடன் கூறுகிறார்.

நாங்கள் கடந்த 1981 முதல், நெய்வேலி இரண்டாவது சுரங்கப் பணி துவங்கியதிலிருந்து சிவில் பிரிவில் பல்வேறு பணிகளில் கடுமையாக உழைத்து வந்தோம்.

காண்டிராக்ட் முறையில் டி.எல்.ஆர் அடிப்படையில்கடந்த 7 வருடங்களாகப் பணிபுரிந்து வந்துள்ள எங்களை கடந்த 30.6.88 முதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திடீரென நிர்வாகம் பணிநீக்கம் செய்துள்ளது.

எங்கள் 23 பேரில், 6 சூப்ரவைசர்கள் 6 கிளார்க்குகள், 6 டிரைவர்கள், 4 அலுவலக உதவியாளர், ஒரு தட்டச்சர் ஆகியோர் அடங்குவர். பள்ளி இறுதிப் படிப்பு முதல் பட்டப்படிப்பு வரை படித்த பல தரப்பட்டவர்கள், நாங்கள்.

எங்கள் 23 பேருக்கும் வயது வரம்பும் கடந்துவிட்ட படியால் இனி நாங்கள் வேலை தேடுவதும் சிரமமானது. கடந்த 7 வருடங்களாக என்எல்சி நிர்வாகத்தை நம்பியிருந்தோம். ஆனால் அதுவே எங்களை குப்புறத் தள்ளிவிட்டு குழியையும் பறிக்கிறது.

பழிவாங்கப்பட்ட 23 தொழிலாளிகளின் ஒருங்கிணைப்புக்குழு செயலாளராகிய நான், எம்து நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் கிடப்பில் போடப்பட்ட நிலையில், இரண்டாவது சுரங்க அலுவலகம் முன் தீக்குளிக்கப் போவதாக அறிவித்தேன். அதன் பிறகு குற்றவியல் ரகசிய



படிப்பகம்

www.padippakam.com

அச்சுக் கோப்பாளர் திபகார் மண்டல் அதே நாளில் மருத்துவமனையில் மாண்டார்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களும் ஊழியர்களும் முதல்வர் ஜோதிபாசுவிடமும் செய்தித்துறை மந்திரி புத்தாதேவ் பட்டாசார்யாவிடமும் ஓடிப்போய் முறையிட்டனர். பாசிச காங்கிரசு குண்டர்களின் கொலைவெறியாட்டத்துக்கு எதிராக எகிறிக் குதிக்கும் ஜோதிபாசு, "இது சட்டம் - ஒழுங்கு பிரச்சினை. போலீசிடம் போய் முறையிடுங்கள்", என்று அவர்களை விரட்டியடித்தார். அதன்பிறகு செய்தியாளர்களும், அறிவு ஜீவிகளும் பகுதிவாழ் மக்களோடு இணைந்து சாலை மறியலில் இறங்கினர். ஆளும் இடதுசாரி கூட்டணியிலுள்ள இதர கட்சிகள் அனைத்தும் இப்படுகொலைக்கு கண்டனம் தெரிவித்தன. இப்பிரச்சினையில் ஆதாயம் தேட முயன்ற காங்கிரசு, பாராளுமன்றத்தில் இதுபற்றி கேள்வி எழுப்பி போலிகளை அம்பலப்படுத்தியது.

மூக்குடைபட்ட போலிகள் பின்னர் செய்தித் துறை மந்திரி மூலம் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி சி.ஐ.டி.யு. குண்டர்களை அமைதிப்படுத்துவதாக சமரச நாடகம் ஆடினர். ஆனாலும் சி.ஐ.டி.யு. ரௌடிகளின் அச்சுறுத்தல் இன்னமும் தொடர்கிறது.

ஆளும் பாசிச ராஜீவ் கும்பலாவது தனக்கு எதிரான பத்திரிக்கைகளை சட்ட பூர்வ வழிகளில் ஒடுக்க முயற்சிக்கிறது. ஆனால் அதன் பங்காளிகளான போலிகள் ரௌடித்தனத்தின் மூலமே அதை சாதிக்கின்றனர். புரிந்து கொள்ளுங்கள், பத்திரிக்கை சுதந்திரத்திற்காகப் போராடுவதாக மார் தட்டிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகளின் லட்சணம் இதுதான்!

---

போலீசார் என்னைத் தேடி வந்தனர். "காண்டிராக்ட் தொழிலாளிகளை என்எல்சி நிர்வாகம் எந்த காலத்திலும் நிரந்தரம் செய்யாது. எப்போது வேண்டுமானாலும் தூக்கியெறிவார்கள். நீ வேறு நல்ல வேலை தேடிக்கொள். தனிப்பட்ட முறையில் அதிகாரிகளை காக்கா பிடித்து வேலை வாங்க முயற்சிக்காமல், இப்படி ஏன் உன்னை வீணாக்கிக் கொள்கிறாய்?" என்று மூளைச் சலவை செய்துவிட்டு போனார்கள்.

ஆனால் எங்கள் போராட்டத்தை நாங்கள் ஒருபோதும் கைவிடப் போவதில்லை. இன்று எங்களுக்கு நேர்ந்த கதி, ஆயிரக்கணக்கான காண்டிராக்ட் தொழிலாளர்களுக்கும் நாளை காத்திருக்கிறது. கொத்தடிமைபோல் வதைபடும் காண்டிராக்ட் தொழிலாளிகளே, என்எல்சி நிர்வாகத்தின் ஆணவத்தை ஒடுக்கி, நமது உரிமைகளை நிலைநாட்ட இன்றே ஒன்றிணைந்து போராட முன் வாருங்கள்!

---



# ரஷிய பூகம்பப் பேரழிவு: சாவு வியாபாரிகளின் அலட்சியம்!

மொத்த நகரமே புதையுண்டு போனது. உற்றார் உறவினர்களைப் பறிகொடுத்த ரஷிய சகோதரிகள் கதறி அழும் காட்சி.

காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோல ரஷியாவிலிருந்து வந்த பேரதிர்ச்சி எம்மைத் தாக்கியது! டிசம்பர் 7ம் நாளன்று ரசிய — அர்மீனிய மாநிலத்தின் காகசஸ் மலைத் தொடர் பகுதியில் ஏற்பட்ட வரலாறு காணாத பூகம்பத்தினால் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 3 நகரங்கள் முழுவதும் புதையுண்டு போனது! ரசிய அரசின் அறிவிப்பின்படி ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மாண்டு போயுள்ளனர். 4 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வீடு இழந்துள்ளனர். அண்டை நகரங்களில் வசிக்கும் பல லட்சக்கணக்கான மக்கள் பீதியடைந்து காடுகளுக்கு ஓடியுள்ளனர். சொத்து இழப்புப் பற்றியான முழு மதிப்பீடு கண்டறியப்பட முடியவில்லை. அமெரிக்க பயணம் மேற்கொண்டிருந்த ரசிய அதிபர் கோர்பச்சேவ், பயணத்தைப்பாதியில் முடித்துக் கொண்டு நாடு திரும்பி துக்கம் விசாரிக்கும் நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்.

வறிய பின் தங்கிய ஒரு மூன்றாம் உலக நாடல்ல ரசியா. நில அதிர்ச்சி பேரபாயத்தை முன்கூட்டியே கண்டறிவதற்கான வாய்ப்பு வசதிகள் கொண்ட மிகப்பெரும் வல்லரசு. ஆனாலும் இந்த பேரழிவை மக்களுக்கு எச்சரிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்க எடுக்க தவறியிருக்கிறது ரசியா.

குறிப்பாக அர்மீனிய மாநிலம் நிலஅதிர்ச்சி அபாயம் அதிகம் கொண்டுள்ள பகுதி என்று நிலவியல் விஞ்ஞானிகள் அரசை ஏற்கனவே எச்சரித்துள்ளனர். இருந்தும் அந்த நகர மக்களுக்கு ஏராளமான 9 அடுக்குக்கும் உயரமான தயார் வீடுகளை (Pre-fabricated house) அமைத்துக் கொடுத்திருக்கிறது அரசு. காரணம், நகர்ப்புறங்களில் தலைவிரித்தாடும் குடியிருப்புப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு மேற்கொண்ட குறுக்கு வழி இது! சாவு பெருமளவு நடந்திருப்பதற்கு, இம்மாதிரியான குடியிருப்பு வடிவமைப்பும் ஒரு காரணம்! இன்னும் கொடுமை என்னவென்றால், நில அதிர்வு அபாயம் உள்ள பகுதி என்று தெரிந்திருந்தும் இப்பகுதியில் அரசு ஒரு அணு உலையும் ரசாயன ஆலையும் நிறுவியுள்ளது. தற்செயலாக நில அதிர்வு இவற்றைத் தாக்கவில்லை. தாக்கியிருந்தால் விளைவு பன்மடங்கு கோரமாக இருந்திருக்கும்!

அதி நவீன ஆயுதக் குவிப்பிலும், உலக மேலாதிக்கப் போட்டியில் அமெரிக்காவை விஞ்ச நட்சத்திர போர் தயாரிப்பிலும் இறங்கியுள்ள ரசிய சமூக ஏகாதிபத்தியவாதிகளுக்கு சொந்த நாட்டு மக்கள் மீது எள்ளளவும் அக்கறையில்லை என்பதையே இது நிரூபிக்கிறது. "நிலஅதிர்வை முன்கூட்டியே கண்டறிந்து அதன் அபாயத்தை மக்களுக்கு எச்சரிக்கத் தேவையான அதிநவீன விஞ்ஞான சாதனங்கள் எம்மிடம் இல்லை", என்று மனம் நொந்து கூறுகிறார் ரசிய விஞ்ஞான அகடமியின் நிலவியல் துறைத் தலைவர். இகோக் நெர்சிசோவ். என்ன கெடுமை! இச்சாதனங்கள் அற்ப பொருளாக மதிக்கப்படுகையில் அவற்றுக்குக் கூட நிதி ஒதுக்காமல் இருக்கிறார்கள் ரசிய சமூக ஏகாதிபத்திய வாதிகள்.

சொந்த நாட்டு மக்களின் மீது பற்றற்ற ரசிய சமூக ஏகாதிபத்தியவாதிகளின் அக்கரையற்ற போக்கால் பரிதவித்து நிற்கும் ரசிய உழைக்கும் மக்களுக்கு உலகப் பாட்டாளி வர்க்கத்துடன் ஒன்றிணைந்து எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்! சாவு வியாபாரிகளுக்கு எதிரான கம்யூனிச பாதையில் வீறு கொண்டெழுமாறு ரசிய மக்களை அறை கூவி அழைக்கிறோம்!

—ஆசிரியர் குழு.



படிப்பகம்

## இந்திய - சீன எல்லை தகராறு:

www.padippakam.com

## மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்:

# பட்டேலின் ஆக்கிரமிப்புவெறி! நேருவின் ஆதிக்கச் சதிகள்



இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இந்த மாதம் சீனாவுக்கும் அரசுமுறைப் பயணம் போகிறார். ஏற்பாடுகள் தடபுடலாக நடக்கின்றன. மந்திரிகள், அதிகாரிகளைக் கொண்ட ஆலோசனைக் கமிட்டி, பயண ஏற்பாட்டுக் கமிட்டி ஆகியன அமைத்து அதிக முக்கியத்துவம் கொடுத்து செயல்படுகிறார்கள்.

34 ஆண்டுகளுக்கு முன்பு ராஜீவின் தாத்தா நேருவும், ஆத்தா இந்திராவும் சீனாவுக்குப் போயிருந்தனர். இப்போது ராஜீவின் பயணத்தை ஒட்டி நீண்ட காலமாகத் தீராதிருக்கும் இந்திய - சீனப் பிரச்சினைகள் முன்னுக்கு வந்துள்ளன. குறிப்பாக இந்திய - சீன எல்லைத் தகராறு. அதோடு நெருங்கிப் பிணைந்துள்ள திபேத், காஷ்மீர் விவகாரங்கள்.

இந்த விவகாரங்களில் சீனாவுக்கு எதிரான பொய்களும் அவதூறுகளும் பரப்பி, தேசிய வெறியூட்டி, இந்திய ஆளும் கும்பலின் பல முக்கியமான குற்றங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. மறைக்கப்பட்ட அந்த வரலாற்று உண்மைகளைச் சொல்லும் பொருட்டு இந்தக் கட்டுரைத் தொடர் எழுதப்படுகிறது.

இந்திய - சீன எல்லைத் தகராறில் குறிப்பாகப் பிரச்னைக்குள்ளாகி இருப்பவை இரண்டு பகுதிகள். அவை; வடக்கே காஷ்மீர் - திபேத் எல்லையில் உள்ள லடாக் - அக்சாய்சின் பிராந்தியம்; வடகிழக்கே பிரிட்டிஷ் காலனிய அரசு வரைந்து கொண்ட மக்மகோன் எல்லைக் கோட்டுக்குத் தெற்கே உள்ள அருணாச்சலப்பிரதேசம்.

இந்தப் பிராந்தியங்களிலும் இவற்றுக்கு இடையிலுள்ள வடக்குப் பிராந்தியத்திலும் இந்தியா - சீனா ஆகிய இருதரப்பும் ஏற்றுக்கொண்ட தெளிவான, வரையறுக்கப்பட்ட எல்லை ஒருபோதும் இருந்ததே இல்லை. 1954 ஆம் ஆண்டுவரை இந்திய அரசின் அதிகாரப்பூர்வ நிலைப்பாடும் இது தான். இந்த யதார்த்தத்தின் அடிப்படையில் இந்திய - சீன எல்லைப் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொண்டிருக்க முடியும்.

அதற்குப் பதிலாக, பிரச்சினைக்குள்ளான பகுதிகளை அடாவடியாகவோ, தந்திரமாகவோ, கைப்பற்றிக் கொள்வதற்கான முயற்சிகளில் இந்திய அரசு ஈடுபட்டது. பிறகு இதுவே இரு நாடுகளுக்கும் இடையிலான பகையாக மாறியது. இந்திய அரசுத் தலைவர்களின் ஆதிக்க - விரிவாக்கக் கொள்கையும், அவர்களுக்கிடையிலான பதவிச் சண்டை - முரண்பாடுகள் ஆகியவையே இதற்குப் பிரதானக் காரணமாகும்.

லெனின் - ஸ்டாலின் தலைமையிலான ரஷ்யாவுக்கும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் காலனியான இந்தியாவுக்கும் இடையே ஓர் அடிதாங்கி நாடாக, இடைத்தடுக்கு நாடாக திபேத்தை மாற்றி வைத்துக் கொள்வதுதான் ஆங்கிலேயர்களின் கொள்கையாக இருந்தது. திபேத் சீனாவின் ஒரு பகுதியாகவே வரலாறு பூர்வமாக இருந்து வந்திருக்கிறது. இருந்தபோதும் சீனத்தை ஆண்டுவந்த மஞ்சுக்கோ வமிசப் பேரரசு பலவீனமாகி சீன யுத்தப் பிரபுக்களிடையிலான தீராத சண்டைகள், தோல்வியுற்ற முதலாளித்துவ சீர்திருத்தப் புரட்சிகள், பல்வேறு ஏகாதிபத்தியங்களின் தாக்குதல்கள் - ஆதிக்கம் ஜப்பானிய ஆக்கிரமிப்பு, கம்யூனிசப் புரட்சியாளர்கள் தலைமை ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் உள்நாட்டு ஜனநாயகம் போர்கள் தொடர்ந்தன.

சீன மத்திய அரசு பலவீனப்பட்டிருந்த இந்தக் காலங்களில் திபேத்தில் புத்த மத குருமார்களான லாமாக்களின் கொடுங்கோன்மை ஆட்சி நடந்து வந்தது. இதைப் பயன்படுத்திக் கொண்டும், தனது படைபலம், பணபலத்தைக் காட்டியும் திபேத்திய ஆட்சியாளர்களுடன் ஏற்றத் தாழ்வான, மேலாதிக்க ஒப்பந்தங்களைப் போட்டுக் கொண்டது ஆங்கிலேயக் காலனிய அரசு. இதனால் திபேத்திடமிருந்து வர்த்தக, ராணுவ, அரசு தந்திர சலுகைகளைப் பெற்றது. இதையெல்லாம் மத்திய சீனத்தை அடுத்தடுத்து ஆண்டு அரசுகள் கடுமையாக எதிர்த்து வந்திருக்கின்றன.

ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்த ஆட்சியைக் கைமாற்றிக் கொண்ட காங்கிரசும், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே ஓர் அடிதாங்கி, இடைத்தடுக்கு நாடாக வைத்துக் கொண்டு காலனிய அரசுக்குக் கிடைத்த சலுகைகளை அனுபவிக்க முயன்றது. இவை இந்தியாவின் பாரம்பரிய சலுகைகள் என்று உரிமை கொண்டாடினர். திபேத்தின் இமயமலைப் பகுதியில் இந்துமத புனித வழிபாட்டுத் தலங்கள் இருப்பதால் இந்தியாவுக்கு வரலாறு பூர்வமான தனிச்சிறப்பான உரிமைகள் இருப்பதாகக் கூறிக் கொண்டனர்.

1949 இல் மாவோ தலைமையிலான புரட்சி வெற்றி பெற்று நிறுவப்பட்ட சீன மக்கள் குடியரசு தனது பாரம்பரியப் பிரதேசங்களை மீட்டு இணைக்கவும் உறுதிப்படுத்தவுமான பணிகளில் இறங்கியது. இதற்கு எதிராக கம்யூனிச எதிர்ப்பு நிலைப்பாடு எழுந்து, திட்டமிட்டு அநீதியான முறையில் திபேத்தின் மீது ஆக்கிரமிப்பு - ஆதிக்கத்தை நிலைநாட்டுவது, இந்திய சீன எல்லைப் பிரச்னையை அடாவடித்தனமாக, ஒருதலைப்பட்சமாக அணுகுவதுதான் சரியானது என்று இந்திய அரசியல் தலைமையின் ஒரு பகுதி கருதியது. இந்திய உள்துறை மந்திரி வல்லபாய் பட்டேல் அதற்குத் தலைமையேற்றார்.

பலாத்காரமான முறையில் பல்வேறு தேசிய இனங்களை ஒடுக்கி 'ஒருங்கிணைத்து' ஏக இந்தியாவை உருவாக்கி இரும்பு மனிதர் என்று பெயர் பெற்றவர் பட்டேல். 'இந்து ராஜ்ஜியம், அகண்ட பாரதம்' என்கிற மதவெறி, ஆதிக்கக் கொள்கையை பகிரங்கமாகக் கடைபிடித்தவர். அந்த முறையிலேயே இந்திய - சீன எல்லைத் தகராறையும், திபேத்தியப் பிரச்சினையையும் அணுக வேண்டும் என்று வலியுறுத்தினார். இவரது கருத்தை அமெரிக்கக் கைக்கூலியும், பாண்டிச்சேரி அரவிந்த ஆசிரம நிறுவனருமான அரவிந்த கோஷ், இந்திய முதல் வெளியுறவுச் செயலாளராகவும், பம்பாய் கவர்னராகவும் இருந்த ஜி.எஸ்.பஜ்பாய் போன்றவர்கள் தீவிரமாக ஆதரித்தனர். சீனாவுக்கு எதிரான இந்த ஆக்கிரமிப்பு -சதி வேலைகளில் அமெரிக்காவுடன் கூட்டுச் சேர வேண்டும் என்று இவர்கள் பகிரங்கமாகவே வாதிட்டனர்.

இதே நோக்கத்தை குழ்ச்சி, தந்திரம், நேச உறவாடி அடுத்துகெடுப்பது மற்றும் சதி செய்து இரகசிய ஆக்கிரமிப்பில் ஈடுபடுவது ஆகிய முறைகளைக் கொண்டு சாதிக்க முனைந்தார் ஜவகர்லால் நேரு. முற்போக்கு, சமாதான முகமூடி போட்டுக் கொண்டு நேரு ஆடிய இந்த இரட்டை நாடகத்தை இராணுவ மந்திரியாக இருந்த கிருஷ்ணமேனன், சீனாவில் இந்தியத் தூதராக இருந்த கே.எம்.பணிக்கர் போன்றவர்கள் துணைநின்று அமுலாக்கினர். ஆனால் நேருவின் முயற்சிகள் தோற்றுப் போன பிறகு அவரது கபடவேடத்தை மூடி மறைத்து விட்டு நேர்மையோடு சமாதான - நட்புறவுக் கொண்ட நேருவின் முதுகிலே குத்திவிட்டார்கள் சதிகார சீனர்கள் என்று இன்னமும் அவதூறு பேசுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

1950 ஆகஸ்டில், இந்தியத் தூதர் பணிக்கருக்கும், சீனப் பிரதமருக்கும் இடையே அதிகாரப்பூர்வமான கடிதங்கள் பலவும் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன. தைவான், திபேத் போன்ற சீனத்தின் பாரம்பரியப் பிரதேசங்களை மீட்க வேண்டியதன் அவசியம் பற்றி அந்தச் சமயத்தில் சீனாவில் ஒரு இயக்கம் நடந்து கொண்டிருந்தது. ''திபேத்தின் மீது இந்திய அரசாங்கத்துக்கு அரசியல் அல்லது பிராந்திய ஆசை எதுவும் ஒருபோதும் இருந்ததில்லை. இனியும் இருக்காது'', என்று 1950 ஆக.12 தேதியிட்டு இந்தியா ஒரு குறிப்புக் கொடுத்தது. அதிலேயே இரு நாடுகளுக்கிடையே எல்லைப் பிரச்னை தீராமல் இருக்கும் நிலைமை ஏற்படும் வாய்ப்பு குறித்து கவலை தெரிவித்தது; சீன - திபேத்திய உறவுகள் சமாதான முறையிலேயே வலுப்படுத்து வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது.

1950 ஆக.22 இல் மேற்கண்ட குறிப்பை வரவேற்றும் திபேத்தியப் பிரச்சினையை சமாதான பூர்வமாகவே தீர்க்க விரும்புவதாகவும் 1950 ஆக.21 இல் சீன அரசு பதிலளித்தது. அடுத்த நாளே செள என்லாய், பணிக்கரைச் சந்தித்தார். அப்போது ''திபேத்தை விடுவிப்பது ஒரு புனிதக்கடமையாக இருக்கும்போதே, அவர்களுடைய நோக்கத்தை, பேச்சுவார்த்தை மூலமாக அடைவதையே அவரது அரசு மிகவும் விரும்புகிறது. ராணுவ நடவடிக்கையின் மூலமாக அடைவதை விரும்பவில்லை.... '' (இரண்டு சீனாக்களில், பக்.105) என்று பணிக்கர் எழுதியுள்ளார்.

''திபேத்துக்கு வழங்கப்பட்டுள்ள சுயாட்சி, சீனாவின் சுயாதிபத்திய உரிமைக்குள் அடங்கியதுதான்'', என்கிற உண்மையை அங்கீகரிப்பதாக 1950 ஆக.26 இல் பணிக்கர் சீன அரசுக்கு ஒரு அதிகாரப்பூர்வ குறிப்புக் கொடுத்தார். ''இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான அங்கீகரிக்கப்பட்ட எல்லை மீறப்படாததாக இருக்க வேண்டும்'' என்று அதிலேயே குறிப்பிட்டுள்ளார்.

''திபேத்துக்கு வடக்கே உள்ள மேற்கு சிங்கியாங் என்ற சீன மாநிலத்தில் தனது பாரம்பரியப் பிரதேசத்தை மீட்பதற்காக சீன மக்கள் இராணுவம் நடவடிக்கை எடுக்கப் போகிறது; செப்டம்பர் மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக திபேத்திய அதிகாரப் பிரதிநிதிகள் குழு இந்தியா வழியாகப் புறப்பட்டு வருகிறது. அது பீஜிங் வந்து சேருவதற்கு இந்திய அரசு உதவும் என்று நம்புகிறோம்'', என்று இந்திய அரசுக்கு 1950 ஆக.31 இல் சீன அயலுறவுத் துறை தெரிவித்தது.

1950 அக்டோபர் முதல் வாரத்தில், மேற்கு சிங்கியாப் மாநிலத்தில் உள்ள காம்டோவில் சீன ராணுவம் நடவடிக்கையில் இறங்கியது. ஆக.19 இல் அதை மீட்டது.

ஒரு அரசியல் தீர்வு காண்பதற்காக பேச்சுவார்த்தைக்காக பீகிங்குக்கு அழைக்கப்பட்ட திபேத்திய அதிகாரப் பிரதிநிதிகள் குழு அதிலே சிறிதும் அக்கறை காட்டாது, ஆறு மாதங்களாகியும் பல்வேறு போலியான காரணங்களைக் கூறிக் கொண்டு, இந்தியாவில் இருந்து புறப்படுவதைத் தள்ளித் தள்ளி வைத்தது. உண்மையில் நடந்தது இதுதான். உயர்ந்த மலைகளின் ஊடாகச் சுற்றி செல்வதை விட இந்தியா வழியாக பீகிங் வருவதுதான் சுலபமானது என்று கூறிப் புறப்பட்டது திபேத்தியத் தூதுக்குழு.

மேற்கு வங்காளம், டார்ஜிலிங் மாவட்டம் காலிம்பாங் என்றும் சிறுமலை நகரின் வழியே வந்தது. அந்நகரம் அமெரிக்க உளவாளியான சி.ஐ.ஏக்களின் இரகசிய முகாம். இதை அறிந்து வேறு வழியாக வரும்படி சீன அரசு கோரியும் திபேத்தியத் தூதுக்குழு சி.ஐ.ஏ.க்களைச் சந்திக்கும் நோக்கத்துடனே அந்த வழியாக வந்தது. அங்கு சி.ஐ.ஏ. மற்றும் இந்திய அதிகாரிகளை சந்தித்து, பீஜிங்குடனான பேச்சுவார்த்தைகளை சிதைத்து, திபேத்தில் ஆயுதந்தாங்கிய இந்திய - சி.ஐ.ஏ. கூலிப் படை தலையிட்டு கலகத்தைத் தோற்றுவிப்பதற்கான சதி செய்தனர். எனவேதான் பல்வேறு பொய்யான காரணங்களைக் கூறிக் கொண்டு ஆறுமாதங்களுக்கு மேலாக திபேத்திய தூதுக்குழு இந்தியாவிலேயே தங்கி இருப்பதற்கு இந்திய அரசு உதவியது. சதியிலே முக்கியப்பங்காற்றியது.

அதே சமயம் 1950 அக்.25 இல் சீன மக்கள் இராணுவம் திபேத்தை மீட்பதற்கான இராணுவ நடவடிக்கையில் இறங்கியவுடன் அடுத்த நாளே இராணுவப் பிரயோகத்துக்கு எதிராக கண்டனக் குறிப்பு அனுப்பியது இந்தியா. அக்.30 இல் சீனாவுக்கு எதிராக இந்திய அரசு தந்திர உதவியை திபேத்திய லாமாக்களின் அரசு கோரியது. அதை ஏற்றுக் கொண்ட இந்திய அரசு அடுத்த நாளே திபேத்துக்குள் ராணுவத்தை அனுப்பியதற்கு எதிராக கடுமையான கண்டனக் குறிப்பை சீனாவுக்கு அனுப்பியது. அந்தக் குறிப்பிலேயே திபேத்தில் சில சலுகைகளை அனுபவிக்கும் உரிமையை பிரிட்டிஷ் பேரரசிடமிருந்து வாரிசுரிமையாகப் பெற்றிருப்பதாக இந்திய அரசு சீனாவுக்கு நினைவுபடுத்தியது.

(திபேத்திய தலைவர்கள் லாசாவில் இந்தியாவின் ஒரு தரகர் (ஏஜெண்ட்) தங்கியிருப்பது; யாதுங் மற்றும் கிமான்ட்சே ஆகிய இடங்களிலும் ஏஜெண்டுகளை வைத்துக் கொள்வது; கியாண்ட்சே வரையிலான வியாபாரத் தடத்தில் தபால் தந்தி நிலையங்களை நிறுவிக் கொள்வது; கியாண்ட்சேவில் ஒரு சிறு பயணப் பாதுகாப்புப் படையை வைத்துக் கொள்வது ஆகியவையே அந்தச் சலுகைகள். இந்தச் சலுகைகள் ஜூலை 3. 1914 இல் கையெழுத்தான ஆங்கிலேய -திபேத்திய வர்த்தக முறைப்படுத்தும் இரகசிய ஒப்பந்தத்தின் படியானது என்று இந்திய அரசுக்குறிப்பிடவில்லை. ஏனெனில் இந்த இரகசிய ஒப்பந்தமே அதே நாளில் நடந்த சிம்லா மாநாட்டு முடிவுகளின் விளைவானது. இந்த இரண்டையுமே சீனக் குடியரசு ஒரு போதும் ஏற்றுக் கொண்டதில்லை.



உறவாடிக் கெடுத்தது 'சமாதானப் புறா' நேருவா? சீனப் பிரதமர் செள-என்-லாயா?

திபேத்திய லாமாக்களின் வேண்டுகோளை ஏற்று சீனாவுக்கு எதிராக இந்தியா அரசு தந்திர முறைத் தலையீடு செய்வதை சீன அரசு கடுமையாக ஆட்சேபித்தது. 1950 அக்.25 இல் சீன ராணுவம் துவங்கிய நடவடிக்கை திபேத்திய லாமாக்களின் அதிகாரத்தை எச்சரிக்கவும், பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திக்கவும் தான். எனவே அது மேற்கொண்டு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு திபேத்துக்குள் முன்னேறவில்லை. ஆனால் அக்.26 குறிப்பில் தெரிவித்தபடி திபேத்திய தூதுக்குழு பேச்சுவார்த்தைக்காக பீஜிங் அனுப்பும் முயற்சியில் இந்திய அரசு இறங்கவில்லை.

அதற்கு முக்கியமான காரணங்கள் சி.ஐ.ஏ.க்களுடன் சேர்ந்து திபேத்திய இரகசியத் தலையீடு செய்து கலகத்தைத் தூண்டும் சதியிலே இந்திய அரசு ஈடுபட்டிருந்தது. நேரு இதை இரகசியமாகத் திட்டமிட்டு செய்து வந்தார். படையெடுத்து ஆக்கிர

படிப்பகம்

www.padippakam.com

மிப்பு செய்ததாக *சீனாவின்* மீது ஐக்கிய நாடுகள் சபையில் 1950 நவ. 7 இல் புகார் செய்யும்படி திபேத்திய லாமா அரசை இந்தியா தூண்டியது. ஆனால் அந்தப் புகாருக்கு ஐ.நா. சபையில் ஆதரவின்றிப் போகவே, அதன் பொதுச்சபையில் விவாதிப்பது அவசியமில்லை என்று இந்தியப் பிரதிநிதி நழுவி விட்டார். சமாதான பூர்வமான பேச்சுவார்த்தையின் மூலமாகவே தீர்த்து விட முடியும் என்று சப்பைக் கட்டுக் கட்டினார்.

அதே சமயம் திபேத்தில் இராணுவ ரீதியில் தலையிட வேண்டும் என்ற நிலைப்பாடு எடுத்த வல்லபாய் பட்டேலை சில மந்திரிகளும், அதிகாரிகளும் கூட பகிரங்கமாகவே ஆதரித்தனர்.

''மாவோ திபேத்தைத் தாக்கியதன் பிரதான நோக்கம் சாத்தியமான விரைவில் இந்



தியாவை அச்சுறுத்துவதுதான். *சீனாவுக்கு* எதிராக ஒரு உறுதியான, கடுமையான தீர்மானம் எடுக்க வேண்டும். *சீனாவின்* கேடான நோக்கங்களை வெளிப்படையாகக் கண்டிக்க வேண்டும். எவ்வித நிபந்தனையுமின்றி அமெரிக்காவோடு நிற்க வேண்டும். நமது சுயமரியாதையோடு, நமக்குச் சாதகமான முறையில் திபேத்தில் அமெரிக்கா தலையீடு செய்வதற்கு எல்லா சாத்தியமான ஏற்பாடுகளையும் செய்துகொடுக்க வேண்டும்'', என்று அரவிந்த கோஷ் வலியுறுத்தினார்.

''இந்தியாவுக்கும் - *சீனாவுக்கும்* இடையே வரையறுக்கப்படாத எல்லை இருக்கிறது. வடக்கிலும், வடகிழக்கிலும் வாழும் மக்கள் இந்தியாவுக்கு விசுவாசமானவர்கள் அல்ல; இந்தியாவின் மீது பற்றுக் கொண்டவர்கள் அல்ல. அவர்கள் திபேத்தின் மீதும் *சீனாவின்* மீதும் ஈடுபாடும் பற்றும் கொண்டவர்கள். இவை இந்தியாவுக்கும் *சீனாவுக்கும்* இடையிலான தொந்தரவுக்குரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக்கூடியவை. கம்யூனிஸ்டுகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான பாதுகாவலர்கள் அல்ல. ஏகாதிபத்தியவாதிகளின் அளவுக்கு கம்யூனிஸ்டுகள் நல்லவர்களாகவும் இருக்கிறார்கள். தீயவர்களாகவும் இருக்கிறார்கள். இமயமலைச் சரிவுகள் மீது மட்டுமல்ல, அசாமின் முக்கியப் பகுதிகள் மீதும் அவர்கள் பேராசை கொண்டுள்ளார்கள்'', என்று 1950, நவ.7 இல் மிகவும் இரகசியமான கடிதம் ஒன்றை பட்டேல் நேருவுக்கு எழுதினார். ('வரிகளுக்கிடையே' என்ற குல்தீப் நய்யார் எழுதிய நூல், பக்.218)

இதிலே கம்யூனிச எதிர்ப்பு வெறியை மட்டுமல்ல, வேறு இரு முக்கியக் கருத்தையும் தெரிவிக்கிறார் பட்டேல். (1) இந்திய - *சீன* எல்லைகள் தெளிவாக, வரையறுக்கப்பட்டவை அல்ல. (2) பிரச்சினைக்குள்ளான பகுதிகளில் வாழும் மக்கள் இந்தியாவின் மீது விசுவாசமோ பற்றோ கொண்டவர்கள் அல்ல. திபேத் - *சீனாவுக்கு* விசுவாசமானவர்கள்; பற்றுடையவர்கள். இருந்தபோதிலும், வரையறுக்கப்படாத பகுதிகளை அந்தப்பகுதி மக்களின் விருப்பத்துக்கும் மாறாக உரிமை கொண்டாடி *சீனா*வுக்கு எதிராக எல்லைத் தகராறைக் கிளப்பியது.

இந்த அநீதியான உரிமையை நிலைநாட்டுவதற்காக இராணுவத் தலையீடு, உளவுத் துறைத் தலையீடு உட்பட 11 நடவடிக்கைத் திட்டங்களைப் பட்டேல் முன்வைத்தார். ஆனால் அப்போது இந்திய இராணுவ தலைமைத் தளபதியாக இருந்த கரியப்பா அதற்கு சம்மதிக்க மறுத்துவிட்டார். எனவே அத்திட்டம் கைவிடப்பட்டது. (நேரு அமைத்த இரகசிய உளவுப்படையான ஐ.பி.யின் முதல் பொது இயக்குநர் பி.என். முல்லிக் எழுதிய ''*சீன* துரோகம்'' . (பக். 80-81)

நேருவுக்கு இரகசியக் கடிதம் எழுதிய இருநாட்களிலேயே, 1950 நவ.7ந்தேதியே, ''திபேத்தியப் பிரச்சினை ஒரு உலகப் போராக வெடிக்கும்'' என்று ஒரு பொது மேடையிலே ஆத்திரத்தோடு அலறினார் வல்லபாய் பட்டேல். மந்திரிசபைக்குள்ளாகவே பிளவு ஏற்பட்டு ஒரு பிரிவு நேரடித் தலையீட்டை ஆதரித்தபோது, ''வரைபடம் இருக்கிறதோ, இல்லையோ, மக்மகோன் கோடுதான் நமது நிச்சயமான எல்லை. அதை யாரும் தாண்டி வர அனுமதிக்க மாட்டோம்'', என்று நாடாளுமன்றத்தில் குளுரைத்தார் நேரு. ''லடாக்கிலிருந்து நேபாளம் வரையிலான எல்லை நீண்ட பயன்பாடு மற்றும் மரபு வழியாகத் தெளிவாக்கப்பட்டுள்ளது'' என்று அப்போது குறிப்பிட்டார்.

''இப்போதைய திபேத்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லை ஏதும் இருக்கிறதா'' என்று ஒரு உறுப்பினர் கேட்டபோது, ''இந்திய -திபேத்திய எல்லையின் சில பகுதிகள் அங்கீகரிக்கப்படவில்லை'', என்று நேரு ஒப்புக் கொண்டார். அவை எந்தெந்தப் பகுதிகள் என்று அவர் விளக்கவில்லை.

''இமய மலைகள் இந்தியாவின் மரபு வழி வடக்கு எல்லையாகும். நேபாளம் இமயமலைகளின் இந்தப் பக்கம் இருப்பதால் அதன் பாதுகாப்புக்கு வரும் எந்த அச்சுறுத்தலும் இந்திய பாதுகாப்புக்கு எதிரான அச்சுறுத்தலாகவே கருதப்படும்'' என்று 1950 டிச.6ந் தேதி நேரு நாடாளுமன்றத்தில் பேசினார்.

**பலாத்காரமான முறையில் பல்வேறு தேசிய இனங்களை ஒடுக்கி 'ஒருங்கிணைத்து' ஏக இந்தியாவை உருவாக்கி இரும்பு மனிதர் என்று பெயர் பெற்றவர் பட்டேல். 'இந்து ராஜ்ஜியம், அகண்ட பாரதம்' என்கிற மதவெறி, ஆதிக்கக் கொள்கையை பகிரங்கமாகக் கடைபிடித்தவர். அந்த முறையிலேயே இந்திய - *சீன* எல்லைத் தகராறையும், திபேத்தியப் பிரச்சினையையும் அணுக வேண்டும் என்று வலியுறுத்தினார். இதே நோக்கத்தை சூழ்ச்சி, தந்திரம், நேச உறவாடி அடுத்துகெடுப்பது மற்றும் சதி செய்து இரகசிய ஆக்கிரமிப்பில் ஈடுபடுவது ஆகிய முறைகளைக் கொண்டு சாதிக்க முனைந்தார் ஜவகர்லால் நேரு.**

எந்த ஏகாதிபத்தியத்திடமிருந்து நேரடி பகிரங்க இராணுவத் தலையீடோ, அரசு தந்திர ஆதரவோ பெறமுடியாமற் போன திபேத்தின் தலைமை மதகுரு தலாய் லாமா 1950, டிச.21 இல் தலைநகர் லாசாவில் இருந்து இந்திய எல்லை ஊரான யாதுங்க்கு தப்பி ஓடினார். இந்தியாவிடம் அரசியல் தஞ்சம் கோரினார். ஆனால் பணிக்கரின் ஆலோசனையின் பேரில் அது நிராகரிக்கப்பட்டது.

இதுதான் நேருவின் கபட வேடம்; இரட்டை நாடகம். வரையறுக்குப்படாத எல்லை என்று ஒப்புக் கொள்ளும் அதே சமயம் பிரச்சினைக்குள்ளான பகுதிகளை ஆக்கிரமிக்கும் இரகசிய இராணுவ நடவடிக்கையில் இறங்கினார். திபேத், *சீனாவின்* ஒரு பகுதி என்று அங்கீகரித்தபோது, திபேத்தில் இராணுவத் தலையீடு செய்வதற்கு பகிரங்கமாக மறுத்தபோதும் இரகசிய சதிகள் மூலம் சி.ஐ.ஏ.வுடன் கூட்டுச் சேர்ந்து எதிர்ப்புரட்சி கலகத்தை மூட்டி ஆதாயம் தேடிக் கொள்ளும் நடவடிக்கையில் இறங்கினார்.

(தொடரும்...)



படிப்பகம்

www.padippakam.com

# அடிப்படை வசதி கோரி ஆர்பாட்டம்!

கிராமப் புறங்களை புறக்கணிக்கும் பாசிச ராஜீவின் புதிய பொருளாதார -ஏகாதிபத்தி சேவக -கொள்கையை எதிர்க்கும் முகமாக அதன் ஒரு பகுதியாக, திருவோணம் ஒன்றிய விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பில், கிராமப்புறத் தேவைகளை நிறைவேற்ற கோரும் ஆர்பாட்ட ஊர்வலம் நடத்தப் பட்டது.

குறிப்பாக இப்பகுதி மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர், மருத்துவம், சாலை வசதி, தெரு விளக்கு தேவைகளை நிறைவேற்றக் கோரி 1.12.88 அன்று கீழ்கண்ட முழக்கங்கள் வடிக்கப் பட்டு ஆர்பாட்டம் நடத்தப் பட்டது.

* தமிழக அரசே! பல ஆண்டுகளாக மூடிக் கிடக்கும் வெட்டுவாக் கோட்டை தாய் சேய் நல விடுதிக்கு மருத்துவரை நியமித்து இயங்கச் செய்!
* ஊரணிபுரம் அருகிலுள்ள கோவில் கொள்ளை கிராமத்திற்கு சாலை, தெரு விளக்கு, குடிநீர் வசதி செய்து கொடு!
* தமிழக அரசே! வி.வி.மு.வின் 14 அம்ச கோரிக்கைகளை (நிலச் சீர்திருத்தம், அடிப்படை வசதிகள் இன்னபிற) உடனே நிறைவேற்று!

இவ்வாறான முழக்கங்கள் பகுதி மக்களின் ஏகோபித்த ஆதரவுடன், எழுச்சியுடன் முழங்கப் பட்டு திருவோணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு முன்பு தோழர் உதயணன் தலைமை தாங்க வெற்றிகரமாக ஆர்பாட்டம் நடத்தப் பட்டது.

விவசாயிகள் விடுதலை முன் னணி
திருவோணம் ஒன்றியம்



# பீதியடைந்த போலீசின் கோழைத்தனம்!

மதுரை, தேனி வட்டம் திருமலாபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் விவசாயிகள் விடுதலை முன்னணி கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடந்த விதம் பற்றியும், அங்கு போலீசு கும்பல் மூக்குடை பட்டு போனது பற்றியும் ஏற்கனவே புதிய ஜனநாயகத்துக்கு எழுதியிருந்தோம். இதன் தொடர்ச்சியாக 'கியூ' பிரிவு போலீசு திரும்பவும் திருமலாபுரம் கிராமத்தில் வாலை நுழைத்திருக்கிறது.

இரண்டு அம்பாசிடர் கார் நிறைய வந்திறங்கி கிராம மக்களை பீதியூட்டிய 'கியூ' பிரிவு தலைமையிலான போலீசுகாரன்கள் திருமலாபுரம் பஞ்சாயத்து யூனியன் தலைவரை ஊரறிய 'ரகசியமாக' சந்தித்தார்கள். அவரிடம் "இங்கு புதிய ஜனநாயகம் சார்பாக எத்தனை பொதுக் கூட்டம் போட்டார்கள், எத்தனைப் பேர் அதில் சேர்ந்துள்ளனர்", என்று மோப்பம் பிடித்துள்ளனர். "மற்ற கட்சிகள் எத்தனையோ இருக்கும்போது இவர்களுக்கு வேறு கட்சி இல்லையா?" என்று புலம்பியிருக்கின்றனர். "எங்காவது ஒரு மூலையில் யாராவது குண்டு வைத்தால் இவர்களைத் தான் வந்து பிடிப்பார்கள்!" என்று உண்மையை உளறியிருக்கிறார்கள்.

"சி.பி.ஐ, சி.பி.எம் போன்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட (!) தேர்தலில் நிற்கின்றன. தேவைகளைக் கேட்டுப் பெறுகின்றனர். ஆனால் இவர்கள் எதற்கெடுத்தாலும் ஆயுதம் ஏந்தி போராடவேண்டும் என்று கூறி மக்களை திசை திருப்புகின்றனர்" என்று ஒப்பாரி வைத்திருக்கின்றனர். "உசிலை வட்டத்தில் இப்படித்தான் சில பேர், பெண்களையும் சேர்த்துக்கொண்டு குடித்து கும்மாளம் அடிக்கின்றனர்" என்று போலீசு நாய்கள், கூசாமல் புளுகியிருக்கின்றன. கடைசியில், "நாங்கள் இங்கு வந்து விசாரித்தது தெரிந்தால்கூட, எங்களை திட்டி பத்திரிக்கையில் எழுதுவார்கள்" என்று சொரணையில்லாமல் சொல்லிவிட்டு பறந்திருக்கின்றனர். விசயம் அறிந்த ஊர் மக்களோ, போலீசு புலிகளின் சூரத்தனத்தைக் கண்டு கைக்கொட்டி சிரிக்கிறார்கள்!

விவசாயிகள் விடுதலை முன்னணி : தேனி வட்டம்

# பீரங்கி திருடனுக்கு எதிராக...

ஓட்டுப்பொறுக்க தமிழக மக்களிடம் வளைய வரும் பீரங்கி திருடன் ராஜீவின் தமிழகச் சுற்றுப் பயணத்தை அம்பலப்படுத்தி தருமபுரி - ஊற்றங்கரை வட்டம் விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பில் சுவரொட்டி பிரச்சார இயக்கம் எடுக்கப்பட்டது.

கெங்கபிராம்பட்டி, உப்பாரப்பட்டி, ஊமையனூர், காரப்பட்டு, குன்னத்தூர், சாமல்பட்டி கிராமங்களில், "பீரங்கித் திருடன் ஓட்டுப் பொறுக்க வருகிறான்! தமிழக மக்களே உஷார்! உஷார்!!", "போலித்தேர்தலை புறக்கணிப்போம், புதிய ஜனநாயகத்திற்காக அணிதிரள்வோம்!", "இந்தியக் கொலைவெறி ராணுவமே இலங்கையை விட்டு வெளியேறு! ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போர் வெல்க!" என்று முழக்கங்கள் வடிக்கப் பட்டு ஒட்டப்பட்டது. இப்பிரச்சாரத்தின் கூடவே புதிய ஜனநாயக இதழின் விற்பனையும், விளம்பரமும் மேற்கொள்ளப்பட்டது. பகுதி மக்கள் ஆவலோடு வரவேற்றனர்.

தகவல்: அறிவுமணி
ஊற்றங்கரை



படிப்பகம்

# பொய் நெல்லைக் குத்தி பொங்க முடியாது! போலி சோசலிசம் புதுவாழ்வைத் தராது!

www.padippakam.com

கிழக்கே பிலிப்பைன்சில் தொடங்கி பர்மாவில் சுழன்றடித்த புரட்சிப் புயல் இப்போது இருண்ட ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள சின்னஞ்சிறு நாடான அல்ஜீரியாவில் இளைஞர்களின் 'கலகமாக' வெடித்துள்ளது.

அல்ஜீரியா; ஆப்பிரிக்காவின் வடக்கு உச்சியில் மத்திய தரைக் கடலை ஒட்டியுள்ள சிறிய நாடு. போலி சோசலிஸ்டுகள் ஆளும், முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடு. இன்று அந்நாட்டின் வீரப் புதல்வர் போர்க் கோலம் பூண்டு நிற்கிறார்கள். ''உணவு கொடு! வேலை கொடு!'' என்று அல்ஜீரிய இளைஞர்கள் ஆளும் போலி சோசலிசக் கும்பலுக்கு எதிராகத் தொடங்கிய 'கலகம்' பெருங்காட்டுத் தீயாக கடந்த அக்டோபர் மாதத்தில் பற்றிப் படர்ந்தது. இப்போது சற்றே தணிந்திருந்தாலும் இன்னும் நீறுபூத்த நெருப்பாகவே உள்ளது.

நூறாண்டு காலத்திற்கும் மேலாக பிரெஞ்சுக் காலனியாக இருந்த அல்ஜீரியாவில் 1950களில் தேசிய விடுதலை முன்னணி(FLN)யின் தலைமையின் கீழ் அல்ஜீரிய மக்கள் காலனியாதிக்கத்துக்கு எதிராக மாபெரும் போராட்டங்களை நடத்தினர். அதைத் தொடர்ந்து 1962ல் அல்ஜீரியா, இந்தியாவைப் போலவே பெயரளவிலான சுதந்திரம் பெற்றது. விடுதலைக்காகப் போராடிய தேசிய விடுதலை முன்னணி கட்சியின் தலைவரான அகமது பென் பெல்லா 1963ல் நாட்டின் அதிபரானார்.

ரஷிய மாடல் போலி சோசலிசத்தை லட்சியமாகக் கொண்ட அல்ஜீரிய ஆளும் கட்சியும் அதிபரும் ஆட்சிக்கு வந்ததும் அன்னிய நிறுவனங்களை நட்ட ஈடு கொடுத்து தேசவுடமையாக்கி அமைதி வழியில் சோசலிசத்தைக் கொண்டு வந்து விட்டதாகப் பசப்பினர். பறி முதல் செய்யாமல் ஏராளமாக நட்ட ஈடு கொடுத்ததன் விளைவாக கஜானா காலியாகி பொருளாதாரமே நிலை குலைந்து நெருக்கடி முற்றி மக்கள் போராடத் தொடங்கினர்.

மக்கள் போராட்டத்தை ஒடுக்கி தமது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டு, பென்பெல்லாவைத் தூக்கியெறிந்து விட்டு அதிரடி ஆட்சிக்கவிழ்ப்பின் மூலம் அரியணை ஏறினார், ஆளும் தேசிய விடுதலை முன்னணிக் கட்சியின் ராணுவத் தளபதி பௌமெடின்னே. சோசலிசத்தை நிலை நாட்டி பொருளாதாரத்தை மேம்படுத்துவதே தமது லட்சியம் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு அவர் 1978 வரை பதவியில் நீடித்தார். அவரது சாவைத் தொடர்ந்து, ஆளும் கட்சியின் பொதுச் செயலாளரான சாட்லி அதிபராகப் பதவியேற்று இன்றும் தொடர்கிறார்.


26 ஆண்டு காலமாகத் தொடரும் தேசிய விடுதலை முன்னணிக் கட்சியும் அதன் அரசும் ராணுவ அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நிறுவிக் கொண்டு அதை சோசலிசம் என்று ஏய்த்தனர். பர்மாவின் நீவினைப் போல, லிபியாவின் ராணுவ சர்வாதிகாரி கடாபியைப் போல, எத்தியோப்பியாவின் கொலைகார சர்வாதிகாரி மெங்குஸ்து மரியம் போல, இது 'சோசலிசத்துக்கான அல்ஜீரியப் பாதை' என்று பசப்பினர்.

பெட்ரோலிய ஏற்றுமதியை மட்டுமே பிரதானத் தொழிலாகக் கொண்டுள்ள அல்ஜீரியாவின் 26 ஆண்டு கால போலி சோசலிச ஆட்சியில் மக்களின் வாழ்நிலை மேலும் மேலும் மோசமானது. வேலையின்மையும் வறுமையும் பூதாகாரமாகப் பெருகியது. அரசின் கூற்றுப் படியே மொத்த மக்கட் தொகையில் ஏறத்தாழ 50 சதவீதத்தினர் வேலையின்றித் தவிக்கின்றனர். மேட்டுக்குடி அதிகார வர்க்க ஊதாரி உல்லாச ஆட்சியால் ஊழலும் பதுக்கலும் நாடெங்கும் தலை விரித்தாடுகிறது. பண வீக்கமும் விலையேற்றமும் விண்ணை முட்டுகிறது. அதோடு, உலகச் சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சியைத் தொடர்ந்து அன்னியக் கடன் என்றுமில்லாத அளவு உயர்ந்து பொருளாதாரமே நிலை குலைந்து போனது.

இருண்ட எதிர் காலத்தையே இளைஞர்களுக்கு பரிசாக அளித்த போலி சோசலிஸ்டுகளுக்கு எதிராக கடந்த அக்டோபர் மாதத்தில் இளைஞர்கள் கலகத்தைத் துவக்கினர். அரசு சின்னங்களும் அலுவலகங்களும் அடித்து நொறுக்கப் பட்டன. அரசு வாகனங்களும் வர்த்தக நிலையங்களும் தாக்கி அழிக்கப்பட்டன. போலீசு நிலையங்களைச் சூறையாடி ஆயுதங்களைக் கைப் பற்றிக் கொண்டு கலகக்காரர்கள் வீதிகளிலே வீரப் போர் புரிந்தனர். தலைநகர் அல்ஜீரிசில் இளைஞர்கள் துவக்கிய இக்'கலகம்' பிற பகுதி உழைக்கும் மக்களையும் திரட்டிக் கொண்டு பிற முக்கிய நகரங்களுக்கும் வேகமாகப் பரவி ஒரு வாரத்திற்கும் மேலாகத் தொடர்ந்தது.

அஞ்சி நடுங்கிய ஆளும் போலி சோசலிச கும்பல் போராடும் மக்களை மிருகத்தனமாக ஒடுக்கியது. ஒவ்வொரு சேரிப் பகுதியிலும், தெருக்களிலும் ராணுவத்தை நிறுத்தி போராடும் மக்கள் மீது குண்டு மழை பொழிந்தது. ஏறத்தாழ 500க்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக் கணக்கான கலகக்காரர்கள் கைது செய்து சிறையிடப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டனர்.

கலகத்தை துப்பாக்கி முனையில் ஒடுக்கிவிட்ட போதிலும் அது இன்னமும் நீறு பூத்த நெருப்பாக இருப்பதைக் கண்டஞ்சும் ஆளும் கும்பல், உடனடியாக பொருளாதாரத்தை மேம்படுத்தப் போவதாகவும், வேலையின்மையை ஒழிக்கப் போவதாகவும் வாக்குறுதிகளை இலவசமாக அள்ளி வீசுகிறது. அதோடு ரஷிய பாணி கூடுதல் ஜனநாயகம், பொருளாதார முன்னேற்றம், சட்டத் திருத்தம் முதலானவை பற்றி மக்களிடம் நாடு தழுவிய அளவில் இரு கட்ட வாக்கெடுப்பு நடத்தி தமது கேடு கெட்ட



போலி சோசலிஸ்டுகளுக்கு எதிராக அல்ஜீரிய மக்கள் நடத்திய வீரப் போருக்குப் பின், தலைநகரில் ஒரு வீதியின் காட்சி.

ஆட்சியை நீட்டிக்க முயற்சிக்கிறது. ஏறத்தாழ 90% மக்கள் பொருளாதார சீர்திருத்தத்தையும் வாழ்க்கை மேம்பாட்டையும் கோரி வாக்களித்துள்ள போதிலும், இப்போலி சோசலிச கும்பலால் நாட்டை எள் முனையளவு கூட முன்னேற்ற முடியாது என்பதே உண்மை.

போலி சோசலிச ஆளும் கும்பலுக்கு எதிராக வெடித்துள்ள இக் கலகத்தைப் பயன் படுத்திக் கொண்டு, நாட்டை இஸ்லாமிய பாணியில் இழுத்துச் செல்ல முஸ்லிம் அடிப்படைவாதிகள் முயற்சித்து வருகின்றனர். போலி சோசலிஸ்டுகளின் கொடுங்கோன்மைக்கு எதிராகவும், திசை திருப்பி ஆதாயம் தேட முயலும் முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கு எதிராகவும் அல்ஜீரிய மக்களின் புரட்சிப் போராட்டங்கள் சரியான பாட்டாளி வர்க்க அரசியல் தலைமையின் கீழ் வழி நடத்தப் பட வேண்டும். இல்லையேல் அவர்களது போராட்டமும் சிந்திய ரத்தமும் தியாகமும் வீணாகிப் போகும்.

☐ மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# வினை விதைத்த காங்கிரசு வினை அறுக்கிறது!

"வினை விதைத்தவன், வினையறுப்பான்" - என்று சொல்வார்கள். உண்மைதான்! வினை விதைத்தவன் வேறு எதையும் அறுவடை செய்ய முடியாது, வினையைத் தவிர. வன்னிய சங்கத்தின் ஆதரவை ஆதாயமாகக் கொண்டு ஆட்சியைப் பிடித்துவிட முடியும் என்கிற ஆசையில் அயோக்கியத் தனமான பல சாணக்கியத் தந்திரங்களில் ஈடுபட்டது பாசிச ராஜீவ் - மூப்பனார் கும்பல். ராமதாஸ் - சுப்பிரமணியம் ஆகிய வன்னியர் சங்கத் தலைவர்களுடன் பல இரகசிய பேரங்கள் நடத்தியது. பண்ருட்டி ராமச்சந்திரன், ராமசாமி படையாச்சி போன்ற வன்னியர் சாதி - காங்கிரசு தரகர்களை அதற்குக் கைக் கூலிகளாகப் பயன்படுத்தியது.

கையிலே அரசு அதிகாரமும், கருப்புப் பணமும் குவிந்து கிடப்பதால் பணத்தையும், சலுகைகளையும் வீசி எவரையும் விலைக்கு வாங்கி விட முடியும். அதிகாரத்தை ஏவி எவரையும் அடக்கி ஒடுக்கிவிட முடியும் என்கிற ஆணவத்தில் குதித்தது, பாசிச ராஜீவ் -மூப்பனார் கும்பல். இப்போது தலைகுப்புற வீழ்ந்து மண்ணைக் கவ்வியது.

"வன்னியர்களை இளிச்சவாயர்கள் என்று கருதும் இந்திரா காங்கிரசார் எங்களை நம்ப வைத்துக் கழுத்தை அறுத்து விட்டார்கள். இனி காங்கிரசுதான் எங்கள் ஜென்ம விரோதி. தமிழ் நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரசுக்கு சமாதி கட்டுவோம்" என்று ஆவேசத்துடன் வெடித்திருக்கிறார் வன்னியர் சங்கத்தலைவர் ராமதாசு.

வன்னியர் சங்க இட ஒதுக்கீடு கோரிக்கையின் மீது ராஜீவ் - மூப்பனார் கும்பலின் எடுபிடி கவர்னர் அலெக்சாண்டர் முடிவு அறிவித்ததும் நம்பிக்கை துரோகம் செய்து விட்டதாக கருதி ராமதாசு குமுறியதன் வெளிப்பாடு இது.

இந்த ராமதாசுதான் நேற்றுவரை, "ராஜீவ் காந்தியின் மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அவரும், கவர்னர் அலெக்சாண்டரும் வன்னியர் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்துள்ளனர். அனுசரணையாக அணுகுகின்றனர். பிரச்சினையை நல்ல விதமாகத் தீர்ப்பார்கள் என்று திடமாக நம்புகிறேன்," என்று கூறி வந்தார்.

"வன்னியர் சங்கக் கோரிக்கைகள் நிறைவேறும் வரை வேறு எந்த கட்சியின் கொடியும் ஏற்றக் கூடாது. வேறு எந்தக் கட்சியும் பொதுக் கூட்டங்களோ, பிரச்சாரங்களோ நடக்கக் கூடாது. தேர்தலைப் புறக்கணிப்போம். தேர்தலை நடத்த விட மாட்டோம்"என்று வன்னியர் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களில் தடை விதித்தனர். அதே சமயம் அந்த கிராமங்களிலும் பாசிச ராஜீவ் - மூப்பனார் கும்பல் ஆரவாரத்துடன் பவனி வந்து பிரசாரம் செய்தனர். பல இடங்களில் வன்னியர் சங்கத்தினரே ராஜீவை வாழ்த்தி வரவேற்றனர்.

வன்னியர் சங்க கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஆசை காட்டி, நம்பிக்கையூட்டி ராமதாஸ் - தனது தரகர்கள் மூலமாக பாசிச ராஜீவ் -மூப்பனார் கும்பல் பேரங்கள் நடத்தி வந்ததையே அவர்களுடைய போக்குகள் காட்டின. அப்படிப் பேரங்கள் நடப்பதை - நடந்ததை ராமதாசும், வன்னியர் சங்கத்தினரும் மறுத்தபோதும், ராஜீவ் - மூப்பனார் வாக்குறுதிகளை நம்பினர்.

ஓட்டுப் பொருக்குவதற்காக காங்கிசார் வழக்கமாக செய்து வரும் சாணக்கியதனம் - அரசியல் தந்திரம் தான் இந்த வாக்குறுதிகள் என்பதை உணரவில்லை.

சாதி,மத, இன, மொழி ரீதியாக மக்களைப் பிளவு படுத்தி, மோதவிட்டு அரசியல் ஆதாயம் தேடிக் கொள்வது காந்தி - நேரு, ராஜாஜி - காமராஜர் காலத்தில் இருந்தே காங்கிரசு பின்பற்றி வரும் பரம்பரை தந்திரம்தான். அவர்களின் முன்னோடிகளும், எஜமானர்களுமான ஆங்கிலேய காலனிய வாதிகளிடமிருந்து வாரிசுரிமையாக வரித்துக் கொண்ட தந்திரம் தான். 1984 பொதுத் தேர்தலில் கூட குஜராத், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தல்களுகருச் சில நாட்களுக்கு முன்பு பிற்பட்ட சில ஜாதிகளுக்கு கூடுதல் இடஒதுக்கீடு உத்திரவு போட்டு ஓட்டுப் பொறுக்கி ஆட்சியைப் பிடித்தது, காங்கிரசு. உடனே அங்கே அந்த ஜாதிகளுக்கும் தாழ்த்தப்பட்ட -முற்பட்ட ஜாதியினருக்கும் கலவரங்கள் வெடித்து பலர் கொல்லப் பட்டனர். இந்தக் கலவரங்களைத் திசை திருப்ப சதி செய்து திட்டமிட்டு - முஸ்லீம் கலவரங்களாக மாற்றியது காங்கிரசு. அதிலும் பலர் படுகொலை ஆயினர். இதுதான் காங்கிரசின் அரசியல்.

அவ்வளவு தூரம் போக வேண்டாம். 1952 தமிழக சட்டமன்ற தேர்தலில் காங்கிரசு தோற்றுப் போனது. வடாற்காட்டில் மாணிக்கவேலர் தலைமையிலான பொது நலக்கட்சி மற்றும் தென்னாற்காட்டில் ராமசாமி படையாச்சி தலைமையிலான உழைப்பாளர் கட்சி ஆகிய வன்னியர் கட்சிகள் வெற்றி பெற்றன.

அவ்விரு தலைமை தலைவர்களுக்கும் மந்திரிப் பதவி கொடுத்து எம்.எல்.ஏக்களை விலைக்கு வாங்கி ஆட்சி அமைத்துக் கொண்டது, காங்கிரசு. ஆனால், வன்னியர் கோரிக்கைகளுக்கு துரோகம் செய்தது. இதுதான் காங்கிரசு பாரம்பரியம்.

"வன்னியர் சங்கத்தினரை நம்பவைத்துக் கழுத்தறுத்து விட்டது", என்கிறார் ராமதாஸ். வன்னியர் உட்பட தமிழகத்தின் மக்களை சாதி, மத ரீதியான அரசியல் மூலம் ஏய்த்து ஆட்சியைப் பிடித்து விடும் பகற்கனவு கண்டது, பாசிச ராஜீவ் - மூப்பனார் கும்பல். அடுத்தடுத்து பல ஊழல் -கிரிமினல் குற்றங்களில் அம்பலப்பட்டு, பல தேர்தல் தோல்விகளை கண்ட அது தமிழகத்தில் எளிதாக வெற்றி பெற்று விடமுடியும் என்று நம்பியது. தமிழக வெற்றியை வைத்து அதன் வீழ்ச்சியை நிமிர்த்தி விட துடித்தது. ஆனால் கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதைப் போல, தமிழகத்தின் வேறு பல சாதிகளும் இடஒதுக்கீடு கோரிக்கையை வைத்து மிரட்டிய போது மிகவும் தந்திரமான இடஒதுக்கீடு கொள்கையை அறிவிப்பதன் மூலம் எல்லா சாதிகளின் ஓட்டுகளையும் பெற்று ஆட்சியைப் பிடித்து விட முடியும் என்று மேலும் கனவு கண்டது. இப்போது அதன் ஆசையில் மண் விழுந்து விட்டது.

தமக்கு நம்பிக்கை துரோகம் இழைக்கப் பட்டதாகக் கருதும் வன்னியர் சங்கத்தினர் சாலை, இரயில் மறியல், தீவைப்பு, பொதுக் கடையடைப்பு ஆகிய போராட்டங்களில் குதித்துள்ளனர். இதை ஒடுக்குவதற்கு பல பட்டாளியன்கள் மத்திய துணை ராணுவத்தை ஏவி உள்ளது, பாசிச ராஜீவ் கும்பல். வன்னியர் போராட்டங்களைச் சாதியக் கலவரங்களாக மாற்றவும் திசை திருப்பவும் கூட அது முயலக் கூடும். ஆகவே வன்னியர்கள் உட்பட உழைக்கும் மக்கள் அனைவரும் இதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். முதலாவதாக, இட ஒதுக்கீடு மூலம் எந்த அரசு அதிகாரிகள் -போலீசில் இடம் பெற சாதி சங்கங்கள் முயற்சிக்கிறார்களே அதே அதிகாரிகள் - போலீஸ்தான் அவர்களை ஒடுக்குவதற்கு பயன் படுகிறது. சலுகைகள் கோருவதற்கான அதே சாதி அமைப்புகள்தான் சாதிக் கலவரங்களுக்கு அடிப்படையாக இருக்கின்றன.

சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு மூலமோ, பார்பனர்கள் மற்றும் பிற முற்படுத்தப் பட்டோர் கோரும் திறமைமூலமோ அதிகாரிகள் போலீஸ் அமைப்பில் பதவிகள்ளப் பெருபவர்களும் மக்களை ஒடுக்கத்தான் பயன்படுத்தப் படுகிறார்கள்.

எனவே, அதிகாரிகள் போலீசு அமைப்பு -அவற்றின் அதிகார -ஆதிக்க ஆட்சியே கூடாது! சாதியப் பிரிவுகள் - சாதிகளே கூடாது. உழுபவனுக்கே நிலம், உழைப்பவர்க்கே அதிகாரம் ஆகிய கோரிக்கைகள்தான் உழைக்கும் மக்களின் வாழ்க்கை முன்னேற -விடுதலை பெற ஒரே வழி! ○



படிப்பகம்

www.padippakam.com




# கரந்தை தமிழக கல்லூரி ஊழல்!
## — வில்லன்களிடம் சிக்கிய தமிழ்த்தாய்!

கருந்தட்டான்குடி - தஞ்சை நகரை ஒட்டினாற்போல் அமைந்துள்ள பகுதி. இங்கு 1911-ஆம் ஆண்டில் திரு.வே.இராதாகிருட்டிணன் என்பவரால் கரந்தைத் தமிழ் சங்கம் துவக்கப்பட்டது. அப்போது இயற்றப்பட்ட அச்சங்க விதிகளின்படி தமிழின் அரிய நூல்களை வெளியிடுவது, பிற மொழிப் படைப்புகளை தமிழில் கொண்டு வருவது, தமிழ் கல்லூரி, கலாசாலைகள் நடத்துவது, எதிர்காலத்தில், இதற்காக இச்சங்க கிளைகளை பல இடங்களில் நிறுவுவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இவ்விதிகள் அனைத்தையும் குப்பைக் கூடையில் வீசிவிட்டு ஊழலில் புரள்வதே பிரதான விதியாக்கி, ஆட்டம் போடுகிறது தற்போதைய இச்சங்க நிர்வாகம்.

1938 ஆம் ஆண்டில் முதன் முதலாக, இச்சங்கத்தின் சார்பில் கரந்தையில் தமிழ் புலவர் கல்லூரி ஒன்று துவங்கப்பட்டது. இந்த சங்கம் அமைந்துள்ள கரந்தை பகுதியும், அப்போதைய அச்சங்கத்தின் பொறுப்பாளர்களும் 'அகம்படியர்' என்ற சாதியினைச் சார்ந்தவர்களாதலால் அக்காலம் தொட்டே இச்சங்கத்தில் சாதியவெறி தலைதூக்கி நின்றது. அதன் வளர்ச்சியாக, தமிழ் வளர்க்க புறப்பட்ட சங்கம் இன்று சாதிய சங்கமாக சீரழிந்து போய் ஊழலில் நாறிக் கொண்டிருக்கிறது.

ராமநாதன். கரந்தைத் தமிழ் சங்கத்தின் தற்போதைய தலைவர். சாதி வெறியர். சம்பல் கொள்ளையர்களுக்கு இணையான 'தொழில்' வல்லுநர். தமிழ் வளர்க்கப் புறப்பட்ட இந்த அயோக்கிய சிகாமணி, சங்கப் பணத்தை சுருட்டுவதற்கு வசதியாக ஆரம்பத்திலிருந்தே நரித்தனமான வேலைகளில் ஈடுபட்டு வருபவர். உதாரணமாக, இங்கு உறுப்பினர்களில், ஆயுள் உறுப்பினர்கள், உறுப்பினர்கள் என இரு பிரிவினர் உள்ளனர். தமிழி(ஈ)னத் தலைவர் கருணாநிதி இச்சங்க ஆயுள் உறுப்பினர். சாதாரண உறுப்பினர்கள் ஆண்டுக்கு ரூபாய் 12 உறுப்பினர் கட்டணம் செலுத்த வேண்டும். அப்படி கட்டவில்லையென்றால் உறுப்பினர் பதவி பறிக்கப்படும்.

இதற்காக முன்கூட்டியே நினைவூட்டுக் கடிதம் அனுப்புவதில்லை. திரு.கி.ஆ.பெ. விசுவநாதம் சென்ற ஆண்டுவரை உறுப்பினராக இருந்தார். இந்த ஆண்டு உறுப்பினர் தொகை செலுத்தாமையால் வெளியேற்றப்பட்டார். பாவம்! முத்தமிழ் காவலருக்கே இந்த நிலையென்றால் மற்றவர்களைப் பற்றி சொல்லவும் வேண்டுமா?

இந்தத் தமிழ் சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்கள் இருவரை அண்ணாமலை, மற்றும் தமிழ் பல்கலைகழகங்களில் 'செனட்' உறுப்பினராக நியமிக்கலாம். அதன் பேரில் அண்ணாமலை பல்கலைகழக 'செனட்' உறுப்பினர் பதவியை சம்பல் - சா.இராமநாதனே ஏற்றுக் கொண்டு, 'சீட்' வாங்கித் தருவது, விடைத்தாளை விரட்டிச் சென்று (Paper Chasing) மதிப்பெண் வாங்கித் தருவது போன்ற தொண்டாற்றி வருகிறார். இந்த ராமநாதன் இரண்டாண்டுக்கு முன்பு வரை தி.மு.க. நகரப் பொருளாளராக இருந்து நிரம்ப அனுபவம் பெற்றவர். இந்த அனுபவம் இப்போது இவரது கல்வி வியாபாரத் தொழிலுக்கு மிகவும் கை கொடுக்கிறது.

இவருடைய கையாள், எஸ்.என்.எம். உபயதுல்லா என்பவர், தமிழ் பல்கலைகழக 'செனட்' உறுப்பினராக இருக்கிறார். இவரும் தி.மு.கவைச் சேர்ந்தவர். வரும் தேர்தலில் சட்டமன்ற சாக்கடையில் புரள ஆவலாக இருப்பவர். தஞ்சையின் முக்கிய வர்த்தக பிரமுகர். குறிப்பாக, அரசு நடத்தும் சூதாட்டங்களில் ஒன்றான லாட்டரிச் சீட்டுடன், போலி லாட்டரிச் சீட்டுகளை கலந்து விற்று காசு சேர்த்த எமகாதப் பேர்வழி! இப்படி, தமிழ் வளர்க்க கிளம்பியிருக்கும் இந்த மூதறிஞர்களின் முகவிலாசத்தை முழுமையாக சொன்னால், முடிவே இருக்காது!

★ தங்களுடைய கல்வி வியாபாரக் கொள்ளை பெரிய அளவில் நடத்த '88ஆம் ஆண்டுமுதல் கரந்தை தமிழ் கல்லூரியை, கலைக் கல்லூரியாக மாற்றிவிட்டனர். முறையான ஆய்வக வசதிகூட இல்லாமல் இப்போது இங்கு வேதியியல் பட்டம் வழங்கும் அதிசயம் நடக்கிறது.

★ பாலர் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, ஆசிரியர் பயிற்சி பள்ளி என்று சங்கிலித் தொடர் நிறுவனங்களை திறந்து வைத்துக் கொண்டு சேரவரும் மாணவர்களிடம் நன்கொடையாக பல லட்சங்களை சுருட்டுகின்றனர். ஆனால், மாணவர்களோ கழிப்பிட வசதி கூட இல்லாமல் சாலையோரங்களில் ஒதுங்குகின்றனர். மாணவிகளுக்கும் இதே அவலம்தான்!

★ 'காலணா பெறாத வேலைக்கு முக்கால் ரூபாய் கணக்கு காட்டுவது' இங்கு சர்வசாதாரணமாக நடக்கிறது. ஏழு சிறுசிறு வகுப்பறைகளுக்கு கீற்றுக் கொட்டகைப் போட ரூபாய் 85,000ம், நான்கு வகுப்பறைகளுக்கு செங்கல் தூண் கட்ட 45,000ம், தமிழ்வேள் உமாமகேசுவரனார் சிலையைச் சுற்றி பூச்செடி வைக்க, தொட்டி கட்ட 75,000ம், சிறிய பகுதிக்கு ஓடு மாற்ற 75,000ம் என சங்கப் பணம் சரஞ்சரமாக பட்டாசு விடப்படுகிறது.

★ அனைத்திற்கும் மேலாக இச்சங்கத்தின் பராமரிப்பிலிருந்த முதலாம் இராசேந்திரன் காலத்து செப்பேடுகளை திருட்டுத்தனமாக விற்க முனைந்தது இக்கொள்ளைக் கூட்டம். அந்தத் திருட்டுத்தனம் அம்பலமாகி தற்போது புலனாய்வுத் துறையினரால் விசாரணை நடந்து வருகிறது!

★ திருச்சியைச் சேர்ந்த பழனியப்பா பிள்ளை என்பவர் ரூபாய் 1 கோடி பெறுமான சொத்தினை இச்சங்கத்திற்கு எழுதி வைத்துள்ளார். இப்போது இதையும் விற்று அகப்பட்டதை சுருட்டிக் கொள்ளும் வேலை ரகசியமாய் நடக்கிறது.

இவ்வளவு அக்கிரமங்களையும் கண்டு ஆத்திரமடைந்த தி.மு.க. சார்பு மாணவர்கள் இதன் ஆயுட்கால உறுப்பினரான 'கலைஞர்' கருணாநிதிக்கு ஒரு புகார் மனுவை அனுப்பினர். புகார் மனு புஸ்வாணமானதுதான் மிச்சம். ஆயினும் கரந்தை - தஞ்சை மக்களின் மத்தியில் எழுந்துள்ள கோபம், மிகவிரைவில் போராட்டமாக வெடித்து இந்த 'வில்லன்'களிடமிருந்து தமிழ் தாயை நிச்சயமாக காப்பாற்றும் என உறுதியாக நம்புகிறோம்.

— தமிழ்மணி தஞ்சை



படிப்பகம்



## புரட்சி போர்ப்படையாய்..

கிராமப்புறங்களை முற்றாகப் புறக்கணிக்கும் பாசிச ராஜீவ் கும்பலுக்கு எதிராக, விவசாயிகள் விடுதலை முன்னணியின் 14 அம்ச உடனடிக் கோரிக்கைகளை விளக்கி விவசாயிகள் விடுதலை முன்னணி அம்மாபேட்டை ஒன்றியத்தின் சார்பாக 22.11.88ல் பிரச்சாரப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. ஒரு டிராக்டரில் பீரங்கித்திருடன் இராசீவ், 'கொலைஞர்' கருணாநிதி, சானகி, ஜெயலலிதா வேடமிட்ட தோழர்கள், இந்திய விவசாயியாக கழுத்தில் நுகத்தடி பூட்டப்பட்ட தோழர்கள், அவர்களை அடித்து நொறுக்கும் பண்ணையாராக ஒரு தோழர் ஆகியோர் கொண்ட காட்சியமைப்பும் வி.வி.மு. தோழர்களும், மற்றொரு டிராக்டரில் வி.வி.மு தோழர்களும், அதோடு கோரிக்கைகள் 14 ஐயும் தனித்தனியாக எழுதிய அட்டைகளும், கொடிகளும் பேனர்களும் என பிரசாரப் பயணம் ஆனைக் கவுண்டனூரில் துவங்கியது. ஒவ்வொரு ஊரிலும் முழக்கமிட்டு ஓரிடத்தில் மையமாக நின்று 40 ஆண்டு 'சுதந்திரத்'தின் யோக்கிதை, ஓட்டுப் பொறுக்கித் தலைவர்கள் —கட்சிகளின் யோக்கியதை, இந்திய விவசாயிகளின் நிலை, பண்ணைகளின் சுரண்டல் அவர்களைக் காக்கும் அரசியல் அமைப்பு என்பவைகள் பற்றி விரிவாக (ஒலி பெருக்கியில்) உரையாற்றப்பட்டு காட்சி விளக்கம் நடத்தப்பட்டது.

குருவரெட்டியூர், சென்னம்பட்டி, இட்டம்பட்டி, சரத்தல், முரளி, ரெட்டியபாளையம், லெ.திருப்பூர், மாத்தூர், குடும்பபாளையம், பி.கே.புதூர், மூனாஞ்சாவடி, ஊமாரெட்டியூர், நெரிஞ்சிப்பேட்டை, அம்மாபேட்டை என முக்கிய ஊர்களை இணைத்து ஏறத்தாழ 40 ஊர்களுக்கு பிரச்சாரம் எடுத்துச் செல்லப் பட்டது.

பிரச்சாரப் பயணத்தில் எல்லா இடத்திலும் மக்கள் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளை விமரிசித்ததும், வெறுப்பை உமிழ்ந்து பேசியதும் மக்களிடையே ஏற்படுகின்ற மாற்றத்தை வெளிப் படுத்துவதாக இருந்தது.

—விவசாயிகள் விடுதலை முன்னணி
அம்மாபேட்டை ஒன்றியம்.

---

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி இணைந்து நடத்தும்**

# போலி ஜனநாயகத் தேர்தல் புறக்கணிப்பு மாநாடு



**ஆளுவதோ அதிகார வர்க்கம் போலீசு!**
**ஆடுவதோ தேர்தல் நாடகம்!**

**ஜனவரி - 9**
**திருச்சியில்**

**போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!**
**படரும் பாசிச அபாயத்தை முறியடிப்போம்!**
**புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி வகுப்போம்!**

*இவண், மாநாட்டுக் கமிட்டி*

*தொடர்புக்கு:- அ.முகுந்தன், 55-நேருநகர், வில்லிவாக்கம், சென்னை - 600 049.*



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# ராணுவச் செலவு இரகசியங்கள்

பிராஸ் டேக்ஸ் ரகசிய போர் ஒத்திகை

பாதுகாப்பு ரகசியம் என்ற மூடுதிரையின் பின்னே இந்திய ராணுவத்திற்கு மக்களின் வரிப்பணம் பெருந்தீனியாக கொட்டப் படுவதை ஒரு சிலராவது அறிந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் அதற்கென அதிகார பூர்வமாக ஒதுக்கப்படும் அதிகப்படியான நிதியில் மட்டும் இந்திய ராணுவம் கொழுத்து திரியவில்லை. இராணுவம் அல்லாத வேறு பல துறைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு சுமார் 4000 கோடி ரூபாய் திருட்டுத் தனமாக இராணுவத்திற்கு திருப்பி விடப்படும் உண்மை இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஆயுதங்களின் செயல் திறனையும் பயிற்சியளிக்கப் பட்ட ராணுவத்தினரின் தரத்தையும் சோதிக்க, திடீர் திடீரென ரகசியமாக போர் ஒத்திகைகள் நடத்தப் படுகின்றன. இதற்காக பல நூறு கோடி ரூபாய்கள் செலவிடப் படுகின்றன.

ஈழ ஆக்கிரமிப்பு, மாலத்தீவு தலையீடு என அண்டை நாடுகளின் மீதான ஆதிக்கத்திற்காகும் உண்மையான ராணுவ செலவு மறைக்கப் படுகிறது. ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து கடனுக்கு வாங்கப்படும் ராணுவ தளவாடங்களின் உண்மை விலை, அவற்றுக்கு செலுத்தப் படும் வட்டி, பாசிச ராஜீவ் கும்பலால் திட்டமிட்டே குறைத்து காண்பிக்கப் படுகிறது. ராணுவ தளவாடங்களின் தேய்மானம், இழப்பு அவற்றை ஈடுகட்ட ஆகும் உண்மை செலவு ஆகியவைகளை பெரும் பகுதி மறைத்து விடுகிறது.

'88-89 ஆம் ஆண்டுக்கு அரசு அறிவித்திருக்கும் அதிகார பூர்வமான ராணுவ பட்ஜெட் தொகை, ரூபாய் 13,000 கோடி. ஆனால், அரசு உண்மையில் செலவு செய்யும் தொகையின் மதிப்பு ரூபாய் 17,000 கோடிக்கு மேல் என கணக்கிடப் பட்டுள்ளது. பட்ஜெட்டுக்கு மேல் செலவு செய்யும் 4,000 கோடி ரூபாயை அரசு எந்த எந்த துறைகளிலிருந்து திருடுகிறது என்பதற்கு ஆதாரமாக இப்போது சில உண்மை விபரங்கள் வெளியில் கசிந்துள்ளது.

□ முழுக்க முழுக்க, ராணுவ பணிகளுக்காகவே அமைக்கப் பட்டு இயக்கப் படும், எல்லைப் பாதுகாப்புப் படை, அசாம் துப்பாக்கிப் படை, இந்திய -திபெத் எல்லைப் படை இவற்றுக்கு ஆண்டொன்றுக்கு அரசு செலவிடும் தொகை ரூபாய் 600 கோடி. ஆனால் இத்தொகை ராணுவ பட்ஜெட்டுக்குள் வரவில்லை. உள்துறை அமைச்சகத்தின் கீழிருந்து இவற்றுக்கான பணம் செலவிடப் படுகிறது.

□ முன்னாள் ராணுவ வீரர்கள், அதிகாரிகளுக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப் படும் ஓய்வூதியத்தின் மொத்த தொகை ரூபாய் 1,340 கோடி. ஆனால், இத்தொகையும் ராணுவ பட்ஜெட்டுக்குள் வரவில்லை. தனித் தலைப்பின் கீழ் இத் தொகை, ராணுவ பட்ஜெட்டுக்கு வெளியே கொண்டு போகப் படுகிறது.

□ தேசப் பாதுகாப்புக்காக அமைக்கப் பட்டிருப்பதாக சொல்லப் படும் ராணுவ பட்ஜெட்டிலிருந்து நிதி ஒதுக்கப்படும் 'ரா'உளவு நிறுவனத்தைப் போன்றே, எல்லைப் பகுதியில் பல்வேறு பெயர்களில் இயங்கும் எ.ஆர்.எல்., எஸ்.எஸ்.எப்., எஸ்.எப்.எப்., மற்றும் எஸ்.எஸ்.பி., போன்ற உளவுத் துறை நிறுவனங்களுக்கு செலவிடப் படும் ரூபாய் 500 கோடி ''எல்லை புலனாய்வு மற்றும் பாதுகாப்பு'' என்ற தனித் தலைப்பின் கீழ் செலவு செய்யப் படுகிறது.

□ ராணுவ நடமாட்டத்திற்காகவும், தரைப்படை போக்குவரத்துக்கும் அமைக்கப் பட்டிருக்கும் ''எல்லை - சாலை அமைப்பு துறை''க்கு செலவிடப்படும் தொகை ''அணு சக்தி மற்றும் அணு விரிவாக்க தடுப்பு துறை''யிலிருந்து ஒதுக்கப் படுகிறது. இவற்றுக்காகும் செலவு பரம ரகசியமாகவே இருக்கிறது.

□ விமானப் படையின் நடமாட்டத்திற்கு பாதுகாப்பளிக்க அமைக்கப் பட்டிருக்கும் ''வான வெளி கண்காணிப்பு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு'' இலாக்காவின் செலவு பயணிகள் விமான போக்குவரத்து துறையின் தலையில் கட்டப்படுகிறது. ஏனெனில் கண்காணிப்பு துறையால் வாங்கப் படும் அதி நவீன ரேடார் கருவிகளும், தகவல் தொடர்பு இணைப்பு சாதனங்களும் பயணிகள் விமான போக்குவரத்து கட்டுப்பாடு இலாக்காவுக்குத் தான் அதிகமாகப் பயன்படுகிறது என புளுகுகிறது, அரசு. இவற்றின் மொத்த மதிப்பு ரகசியமாக வைக்கப் பட்டுள்ளது. அதன் ஒரு பகுதிக்கே ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு ரூபாய் 100 கோடியையும் தாண்டும் என கணக்கிடப் படுகிறது.

□ 'பிராஸ் டேக்ஸ்',(Brass Tacks) 'செக்கர் போர்ட்'(Chequer board) என்று பெயர் வைக்கப் பட்டு வட எல்லை இமய மலை அருகிலும், பஞ்சாப் - பாகிஸ்தான் எல்லையிலும் நடத்தப்பட்ட இரு பெரும் போர் ஒத்திகைகளுக்கான செலவு ராணுவ பட்ஜெட்டுக்குள் வரவேயில்லை. இதற்கான தொகையும் ரகசியமாக வைக்கப் பட்டுள்ளது. யுத்தம் என்று ஏற்பட்டால் ஒரு நாளில் ஒரு போர் முனையில் ஏற்படும் செலவினம் மட்டும் 700 கோடி ரூபாயாக இருக்கும். இப்படி, மதிப்பிடும் முதலாளித்துவ பொருளாதார வல்லுநர்களின் கூற்றுப் படியே பார்த்தால் கூட இந்த போர் ஒத்திகைகளுக்கான செலவு பல நூறு கோடி ரூபாய்களைத் தாண்டியிருக்கும்.

□ நவீன ஆயுதத் தளவாடங்களை இயக்கத் தேவையான எரி சக்தி, மற்றும் அண்டை நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்த, அதிரடி நடவடிக்கைகளுக்காக சரஞ்சரமாக பறக்கும் ராணுவ விமானங்கள், ஹெலிக்காப்டர்களுக்கு தேவையான எரி பொருட்களுக்காகும் செலவுகள் அரசு எண்ணெய் கழகங்கள், மற்றும் பயணிகள் விமானத் துறையிடமிருந்து திருடப் படுகிறது. இவ்வாறு, இத்துறைகளிடமிருந்து ஆண்டொன்றுக்கு 500 கோடியிலிருந்து 1,000 கோடி ரூபாய் வரை ராணுவத்திற்கு திருப்பி விடப் படுகிறது.

□ ஈழத்தில் நிலைகொண்டிருக்கும் இந்திய ராணுவம் மற்றும் அதிகார வர்க்கத்தின் எண்ணிக்கை 1,20,000. இதைப் பராமரிக்க குறைந்தது ஒரு மாதத்துக்கு ஆகும் செலவு 100 கோடி ரூபாய். போரில் சேதமாகும் ராணுவத் தளவாடங்களின் மதிப்பு இதில் சேரவில்லை. தரை, வான், கடல் வழியே இடம் பெயரும் ராணுவம் மற்றும் தளவாடங்கள் அதன் போக்குவரத்துக்கு ஆகும் செலவு, 'ரேஷன்', குடியிருப்பு இவற்றுக்கு ஆகும் செலவு, மோதல் நடவடிக்கைகளுக்கு ஆகும் செலவு என சில தலைப்புக்களே ரூ.100 கோடிக்கு மேல் விழுங்கி விடும்.

ஆக, ஒரு ஆண்டுக்கு ஈழ ஆக்கிரமிப்புக்கு ஆகும் செலவு ஏறக்குறைய ரூபாய் 1,260 கோடிக்கு மேல்! இவ்வளவு பெருந்தொகை இதுவரை ராணுவ பட்ஜெட்டுக்குள் வரவேயில்லை. இது இல்லாமல் மாலத் தீவு தலையீடு -அதிரடி நடவடிக்கைக்கு ஆன செலவு ரூபாய் 200 கோடி. இது அரசின் எடுபிடி பத்திரிக்கைகளே தரும் புள்ளி விவரம். இவ்வாறான செலவுகளுக்கு என எந்த ஒதுக்கீடும் ராணுவ பட்ஜெட்டுக்குள் இல்லை.

இந்திய மக்களின் ரத்தத்தை - வரி பணத்தை - இப்படி பீப்பாய் பீப்பாயாக குடித்து விட்டு தான் இந்திய ராணுவம் தலை விரித்தாடுகிறது. 80 கோடி மக்களின் சதையையும் ரத்தத்தையும் வல்லூறு போல் வட்டமடித்து கொத்திக் குதறும் இந்திய ராணுவத்தின் அட்டகாசம் இதோடு



படிப்பகம்

முடிந்து விடுவதில்லை. முடிவே இல்லாத அதனுடைய அதிகார போதைக்கும் அடாவடித்தனத்திற்கும் மொத்த நாடும் சுடுகாடாக்கப் படுகிறது. மக்களின் வாழ்வுக்கான வளர்ச்சி திட்டங்கள் தொடர்ந்து குறுக்கிச் சுருக்கப் படுகிறது. சுருக்கப்பட்ட திட்டங்களும் "நிதியில்லை" யென காரணங்காட்டி கிடப்பில் போடப் படுகின்றன. மீதி கணக்கு காட்டப்படும் சொற்ப அளவிலான அரசு வருவாயும் இறக்குமதி செய்யப்படும் ஆயுதக் கொள்முதல் கடனுக்காக, வல்லரசு நாடுகளுக்கு வட்டியாக கொட்டப் படுகிறது.

உதாரணத்திற்கு '82 ஆம் ஆண்டில் 40 கோடி ரூபாய்க்கு ஒரு மிராஜ் விமானம் 7 ஆண்டு கால கடனுக்கு 7 சதவிகித வட்டிக்கு வாங்குவதாக வைத்துக் கொள்வோம். வட்டியோடு அதன் உண்மை விலை ரூ.51 கோடியாகிறது. அது மட்டுமல்ல, ஆண்டு தோறும் தேய்ந்து வரும் பணத்தின் மதிப்புக்கு கணக்குப் போட்டால் 7 ஆண்டு காலத்தில் மிராஜ் விமானத்திற்கு நாம் செலுத்த வேண்டிய தொகை 64 கோடியாகும். ரூபாய் மதிப்பு ஆண்டுதோறும் 5 சதவிகிதம் தேய்ந்து போவதாக கணக்கு போட்டாலே மேற்கண்ட தொகையை எட்டிவிடும். இந்த சாதாரணக் கணக்குப் படி ராணுவ செலவினங்களின் அனைத்து தலைப்புக்கும் வட்டி, பண வீக்கத்தை சமன் படுத்த என குறைந்தது 10 சதவிகித கூடுதல் தொகையாக ஒதுக்கினால் தான் ஓரளவு உண்மையான ராணுவ பட்ஜெட் கிடைக்கும்.

இது மட்டுமில்லாமல், ஆண்டொன்றுக்கு ராணுவ தளவாடங்களில் ஏற்படும் தேய்மானம், இழப்புக்கள் இதை சமன் செய்ய ஆகும் செலவு, இதோடு புதிதாக சேர்க்கப்படும் பலத்திற்கு ஆகும் செலவுக்கு ஒதுக்கப் படும் தொகை என, பகிரங்கமாக வைக்கப் படும் ராணுவ பட்ஜெட்டைக் கொண்டு தான் ராணுவச் செலவை ஓரளவுக்கு துல்லியமாக கண்டறிய முடியும். எனவே, தற்போது வெளிவந்திருக்கும் ராணுவத்திற்கு ஆகும் முழு முற்றான செலவு 17,000 கோடிதான் என நம்புவது பேதமை!

உதாரணத்திற்கு, ஒவ்வொரு ஆண்டும் குறிப்பாக, தரைப்படையும் கப்பற்படையும் அதன் அளவிலும் தரத்திலும் தொடர்ந்து விரிவாக்கப் படுகிறது. பாசிச ராஜீவ் கும்பல் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய ராணுவத்தினரை ஈழ ஆக்கிரமிப்புக்கு அனுப்பியிருப்பதால் உள் நாட்டு தேவைக்காக '88-'89 ஆம் ஆண்டில் மட்டும் அவசரமாக 40,000 பேரை புதிதாக தரைப்படையில் சேர்த்துள்ளது. இந்த பிரமாண்டமான சேர்க்கைக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கீடு ராணுவ பட்ஜெட்டில் இடம் பெறவேயில்லை.

சாதாரண தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மருத்துவ வசதி கேட்டு மக்கள் கையேந்தும் போது "நிதியில்லை" என்பதையே தனது வழமையாகக் கொண்டுள்ள அரசு,

மக்கள், கோர பசிக்கு மாங்கொட்டை தின்றும், கொள்ளை நோய்க்கு வேப்பிலை அடித்தும் ஆயிரக் கணக்கில் மடியும் போது கைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கும் அரசு,

நாட்டு முனையெறிதலுக்கு ஒரு துரும்பையும் எடுத்துப் போடாமல் உண்டு கொழுத்து திரிவதையே தனது முழு நேரத் தொழிலாகக் கொண்ட ராணுவத்திற்கு செய்யும் செலவு 17,000 கோடிக்கும் மேல்!

காரணம், ராணுவம் ஆளும் பாசிச ராஜீவ் கும்பலின் விசுவாச வேட்டை நாய்! பாசிச ராஜீவ் கும்பல் காலாலிடும் பணியை தலையால் செய்து முடிக்கும் வளர்ப்பு பிராணி!

எனவே, இந்த இரண்டு கும்பலும் சேர்ந்து அமுக்கிய கொள்ளையில், ராணுவம் தன் பங்கை உரிமையோடு உட்கார்ந்து தின்கிறது.

இதுமட்டுமல்ல, எரியும் வீட்டில் பிடுங்கியதுவரை லாபமென ஏசிய சமூக ஏகாதிபத்தியவாதிகள் நம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் ஆயுத விற்பனையில் மறைமுகமாக பெருங் கொள்ளையடிக்கிறார்கள்.




கடல் அரசன் என்றழைக்கப்படும் ஐ.என்.எஸ் ராஜ்புத்: நீர் மூழ்கிக் கப்பல்களை, வானில் பறக்கும் விமானங்களை தாக்கி அழிக்கும் அதி நவீன போர்க் கப்பல்.

தன்னுடைய, நட்பு நாடுகள் டாலர் மதிப்பிலான வர்த்தக சூதாட்டத்தின் கீழ் சிக்கி சீரழிவதை தடுப்பது என்ற பம்மாத்தின் கீழ் அந்தந்த நாடுகளின் நாணய மதிப்பிலேயே தன்னுடைய வர்த்தகத்தை நடத்துகிறது ரசியா. இதே முறையில்தான் இந்தியாவிடமும் வர்த்தகம் நடத்துகிறது. இதனடிப்படையில் ரசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆயுத தளவாடங்களின் மதிப்பை ஈடுகட்டும் வகையில் ரூபாய் மதிப்பில், இந்திய பண்டங்கள் மற்றும் அரை நேர்த்தியாக்கப்பட்ட கனிமச் செல்வங்கள் ரசியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதனால் அந்நியச் செலாவணி கிடைக்கும் வாய்ப்பு முற்றிலுமாக தடைபடுகிறது. டாலர் மதிப்பில், வர்த்தகம் நடத்தும் உலகின் பிற நாடுகளில் ஆயுதத் தளவாடங்களின் மதிப்பு ரசியாவை விட ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும் நம்மால் அதை வாங்க முடிவதில்லை. ஏனெனில் நம்மிடம் தேவையான அந்நியச் செலாவணி கையிருப்பில் இருப்பதில்லை. இதனால், நாம் மேலும் மேலும் ரசியாவை சார்ந்திருக்கும் நிலை ஏற்படுகிறது. இவ்வாறு ஆண்டொன்றுக்கு 500 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்தியப் பொருட்கள் ரசியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதுமட்டுமல்ல நாளும் வீழ்ச்சியடையும் ரூபாயின் மதிப்பால், வர்த்தகத்தை சமன் செய்ய மேலும் மேலும் ஏராளமாக இந்தியப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சோசலிச முகமூடி அணிந்த ரசியாவின் புதிய ஜார்கள், காலாவதியாகிப் போன தங்கள் நாட்டின் ஆயுதங்களை நம் தலையில் கட்டி, நம் நாட்டின் வளங்களைச் சுரண்டிச் செல்ல, "இந்தியாவிற்கு ஆபத்து" என அடிக்கடி அபாய சங்கு ஊதி பீதி கிளப்புவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

இதனால், ஆண்டொன்றுக்கு 3,40,000 கோடி ரூபாய் மதிப்புக்கு தேசிய உற்பத்தி ஈட்டி தரும் உழைக்கும் மக்களுக்கோ, அட்க்குமுறையும் அரை வயிறு கஞ்சிம்தான் பரிசாகக் கிடைக்கிறது.


ஏகாதிபத்தியவாதிகளின் இந்த பகற்கொள்ளையை, அவர்களின் ஏவல் நாயாக செயல்படும் பாசிச கும்பலின், தேச விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தும் தேச பக்தர்களையும் புரட்சியாளர்களையும், தேச விரோதிகள் அந்நிய நாட்டு உளவாளிகள் என முத்திரைக் குத்தி முடமாக்க முயற்சிக்கிறது பாசிச கும்பல். எனவேதான், ராணுவச் செலவு, பாதுகாப்பு ரகசியம் பற்றி கேள்வி எழுப்பும் அனைவரின் மீதும் மூர்க்கமாகப் பாய்கிறது.

—பச்சையப்பன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ் மதியழகன், 21, பாலாஜி சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. அச்சிடுபவர்: எம்.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா


ஆண்டு முழுவதும் உல்லாசப் பயணம், அன்னை இந்திராவுக்கு கற்பாறைத் தோட்டம் என்று மக்களின் வரிப்பணத்தில் நீச்சலடிக்க பிரதமர் ராஜீவுக்கு மட்டும்தான் உரிமையிருக்கிறதா என்ன? இதோ, தனது மேற்பார்வையின் கீழ், அரசுப் பணம் 4 கோடி ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்ட உலகிலேயே மிகப்பெரும் புத்தர் சிலையை, நவம்பர் மாதம் 19ந் தேதி ஹைதராபாத் ஹுசேன் சாகர் குளத்தின் நடுவே திறந்து வைத்தார் என்.டி.ஆர்.

200 டன் எடையும், 45 அடி உயரமும் கொண்ட இச்சிலையை ஹைதராபாத் நகரிலிருந்து 64 கி.மீ. தூரத்திலுள்ள ராயகிரி மலைக்குன்றில் 50 சிற்பிகளும், 150 உதவியாளர்களும் சேர்ந்து 3 ஆண்டுகாலமாக உருவாக்கினர். அங்கிருந்து இச்சிலையைக் கொண்டு வர இரண்டு பன்னாட்டு கம்பெனிகள் அமர்த்தப்பட்டது. சிலையைக் கொண்டு வர அதன் போக்குவரத்து செலவுக்கு மட்டும் அரசு 61 லட்சம் ரூபாய் செலவு செய்தது. சிலை திறக்கப்பட்ட இடத்தை மேலும் அழகுபடுத்த 11 கோடி ரூபாய்க்கு இன்னும் பல புதிய திட்டங்களை அமுலாக்க அரசு ஆலோசித்து வருகிறது.

இதோ, ஓடும் ரயிலில் தலையைக் கொடுத்து உயிரை மாய்த்துக் கொண்ட இளைஞரை பாருங்கள்! பாசிச சந்நியாசி என்.டி.ஆரின் ஆட்சி இந்த உழைப்பாளி இளைஞருக்கு கொடுத்த பரிசு இது! ஆந்திரா - பிரகாசம் மாவட்டம் இபுருபாளையம் பகுதியைச் சேர்ந்த கைத்தொழில் நெசவாளி இவர். நெய்த துணிகள் கேட்பாரற்று தேங்கிப் போக, சமயம் பார்த்து ஆந்திர அரசும் நெசவுத் தொழிலை முற்றாக புறக்கணித்தது. நெசவுத் தொழிலுக்கு பெயர் போன இப்பகுதியின் 50,000க்கும் மேற்பட்ட குடும்பங்களில் கடந்த 2 ஆண்டுகளில் பல மாதங்கள் அடுப்பு புகையவில்லை. வேலை இல்லை, சோறு இல்லை. குடும்பம் குடும்பமாக குழந்தை குட்டிகள் கொலைப்பட்டினியில் சிறுக சிறுக செத்துக் கொண்டிருக்கின்றன.

இதைப் பார்க்கச் சகிக்காத பெற்றோர்கள் தற்கொலை செய்து கொண்டு தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். அதில் ஒருவர்தான் இந்த, குட்டண்டி வெங்கடேசவரலு. ஒரு குழந்தைக்கு தந்தையான 25 வயதே நிரம்பிய இளைஞர்! கடந்த 2 மாதங்களில் இவரைப்போல் குறைந்தது 10 நெசவாளி குடும்பத் தலைவர்கள் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டனர்.

செயற்கை துணி ஆலைகளுக்கு ஆண்டொன்றுக்கு 600 கோடி ரூபாய், சலுகை மானியம் அளிக்கிறது பாசிச ராஜீவ் அரசு. பல கோடி ரூபாய்களை குப்பையாக இறைத்து அரசியல் வாணவேடிக்கை நடத்துகிறது பாசிச என்.டி.ஆர் அரசு. நாட்டின் பாரம்பரிய கைத்தொழிலோ படுகுழியில் தள்ளப்பட்டு மண்மூடப்படுகிறது. மக்களை வாழவைக்க, இந்த மக்கள் விரோத கூட்டத்தை நாம் சவக்குழிக்கு அனுப்புவது எப்போது?



படிப்பகம்